Registered as Newspaper

# உதயன்

சுடர் : 36 கதிர் : 235 | புதன்கிழமை | ஆடி 5 ஆம் நாள் 21 ஜூலை 2021 | வள்ளுவர் ஆண்டு 2052 | பக்கங்கள்: 20 விலை: 30 | செய்தி : 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

## யாழ். வருகின்றார் மஹிந்த ராஜபக்ச

யாழ்ப்பாணம், ஜூலை 21
பிரதமர் மஹிந்த ராஜபக்ச எதிர்வரும் 31ஆம் மற்றும் முதலாம் திகதிகளில் யாழ்ப்பாணத்துக்கு வருகை தரவுள்ளார். யாழ்ப்பாணத்தில் பல்வேறு அபிவிருத்தித் திட் 19

# நம்பிக்கையில்லா பிரேரணை 'அவுட்'

**152 : 61 என பலம் காட்டியது அரசு**



கொழும்பு, ஜூலை 21
வலுசக்தி அமைச்சர் உதயகம்மன்பிலவுக்கு எதிராக பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியால் முன்வைக்கப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணையை மூன்றிலிரண்டு பெரும்பான்மை பலத்துடன் அரசு தோற்கடித்துள்ளது. 19

## காய்ச்சலுக்கு குழந்தை பலி

யாழ்ப்பாணம், ஜூலை 21
குமுழமுனை முழுங்காவிலைச் சேர்ந்த நஞ்சீவன் தனுசியன் என்ற நான்கு மாதமேயான ஆண் குழந்தையொன்று காய்ச்சல் காரணமாக உயிரிழந் 19

## யாழ்ப்பாணத்தில் கொரோனாவால் ஒருவர் இறப்பு!

யாழ்ப்பாணம், ஜூலை 21
யாழ்ப்பாணத்தில் மேலும் ஒருவர் கொரோனாவால் உயிரிழந்துள்ளார். யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சை 19

## அரசை அசைக்க முடியாது பிரதமர் மஹிந்த இறுமாப்பு



கொழும்பு, ஜூலை 21
'எந்தப் பிரேரணை மூலமும் எமது அரசையோ அல்லது எமது அரசிலுள்ள தனிநபர்களையோ தோற்கடிக்க முடியாது. பொதுஜன பெரமுன அரசு மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடன் ஆட்சி செய்கின்றது என்பதை சஜித் பிரேமதாஸவும் அவரது சகாக்களும் இனியாவது புரிந்து கொள்ள வேண் 19

## முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கம்மன்பிலவை ஆதரித்து வாக்களிப்பு!

*கம்மன்பிலவை சீண்டிய சாகரவும் அடங்கினார்*
*ரணிலும் அதிர்ச்சி வைத்தியம் கொடுத்தார்*

கொழும்பு, ஜூலை 21
அரசமைப்பின் 20ஆவது திருத்தத்துக்கு ஆதரவு வழங்கிய முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நம்பிக்கையில்லாப் பிரேரணையின்போதும் ஆளுங்கட்சிக்கு சார்பாக நேற்றுச் செயற்பட்டனர். இதன்படி வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பிலவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை எதிர்த்து ரிஷாத் பதியு 19

## இணுவிலில் வாள்வெட்டு தம்பதியர் காயம்!

யாழ்ப்பாணம், ஜூலை 21
இணுவில் காரைக்கால் பகுதியில் வாள்வெட்டு வன்முறைக் கும்பல் நடத்திய தாக்குதலில் குடும்பத் தலைவரும் 19

## வடக்கு பிரதம செயலாளராக வவுனியா மாவட்டச் செயலர்

*நியமனக் கடிதம் கையளிப்பு*

யாழ்ப்பாணம், ஜூலை 21
வவுனியா மாவட்டச் செயலர் எஸ்.எம்.சமன் பந்துலசேன, வடக்கு மாகாண பிரதம செயலாளராக ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவால் நியமிக்கப்பட்டுள்ளார். வடக்கு மாகாண பிரதம செயலாளராகப் பணியாற்றிய அ.பத்திநாதன் 19

## விரைவில் கொவிட் நான்காவது அலை

*மருத்துவர் சங்கம் எச்சரிக்கை!*

கொழும்பு, ஜூலை 21
இலங்கையில் கொரோனா வைரஸ் பரவலின் 4ஆவது அலை உருவாகும் அபாயம் உள்ளது. அதன் ஆரம்பக்கட்ட நிலையில்தான் தற்போது நாடு உள்ளது என்று இலங்கை மருத்துவர் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.
கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது இலங்கை மருத்து 19

## வவு.வில் வெள்ளைவானில் பெண் கடத்தப்பட்டு விடுவிப்பு!

*பொலிஸில் முறைப்பாடு*

வவுனியா, ஜூலை 21
வவுனியாவில் வெள்ளை வானில் வந்தவர்களால் பெண்ணொருவர் நேற்றுமுன்தினம் கடத்தப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்டுள்ளார் என்று வவுனியா பொலிஸில் முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டுள்ளது.
வவுனியா, கோவில்குளம் பகுதியில் உள்ள அகிலாண்டேஸ்வரர் சிவன் ஆலயத்துக்குச் சென்றுவிட்டுத் திரும் 19




மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்களுக்குத் தேவையான மானியங்கள் வழங்கியுள்ளோம்

## கூறுகிறது அரசு

கொழும்பு, ஜூலை 21

எரிபொருள் விலைகள் அதிகரிப்பு மக்களின் வாழ்க்கைச் செலவுக்கு பாதிப்பானது என்பதை ஏற்றுக்கொள்கிறோம் எனத் தெரிவித்துள்ள அமைச்சர் தினேஸ் குணவர்தன, ஆனாலும் அரசு மக்களுக்கு தேவையான மானியங்களை வழங்கியுள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்ற அமைச்சர் உதயகம்மன்பிலவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான இரண்டாம் நாள் விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எதிர்க்கட்சி யோசனையைக் கொண்டுவரும்போது அதில் அர்த்தம் இருக்க வேண்டும். ஆனால் எதிர்க்கட்சியினரின் நம்பிக்கையில்லாப் பிரேரணையில் குறிப்பிடபபட்டுள்ள விடயங்களை பார்க்கும்போது அமைச்சர் தவறு செய்யவில்லை. இதனால் இது அரசியல் ரீதியான தீர்மானமே. அமைச்சரவையின் உபகுழுவின் தீர்மானத்தையே அவர் அறிவித்துள்ளார். இதனால் முன்வைக்கப்பட்டுள்ள யோசனை எந்தவித அடிப்படையும் இல்லாதது. மிகவும் அநீதியான வகையில் பிரேரணையை கொண்டு வந்துள்ளனர். எதிர்க்கட்சியிலேயே ஒரே நிலைப்பாட்டில் யாரும் இந்த தீர்மானத்தில் இல்லை. எரிபொருள் விலை அதிகரிப்பால் வாழ்க்கைச் செலவுக்கு பாதிப்பு ஏற்படும். ஆனால் அரசு தேவையான மானியங்களை மக்களுக்கு வழங்கியுள்ளது. தற்போது உலகிலாவிய தொற்று நிலைமையில் மக்களுக்கு தேவையான மானியங்களை மக்களுக்கு வழங்கியுள்ளது. நாங்கள் சவால்களுடன் மிகவும் வெற்றிகரமாக செல்ல முடியுமாக இருக்கின்றது. சீனா பெரும் ஒத்துழைப்புகளை வழங்கியுள்ளது. அதேபோன்று இந்தியா அமெரிக்கா மற்றும் ரஷ்யாவும் ஒத்துழைப்புகளை வழங்கியுள்ளது.

இப்போது எதிர்க்கட்சியினர் எந்தளவுக்கு முயற்சிகளை முன்னெடுத்தாலும் அமெரிக்கா போன்ற நாடுகள் எங்களுக்கு ஒத்துழைப்புகளை தொடர்ந்தும் வழங்கி வருகின்றன- என்றார். (ஒ.22)

# ஆளும் கட்சியும், எதிர்க்கட்சியும் கின்னஸ் சாதனை படைத்துள்ளன

## ரணில் கிண்டல்

கொழும்பு, ஜூலை 21

**ஆட்சிக்கு வந்து 10 மாதங்களுக்குள் நாட்டை சிக்கலுக்குள் தள்ளியுள்ள அரசு கின்னஸ் சாதனைக்குள் உள்வாங்கப்பட வேண்டியதே என்று தெரிவித்துள்ள ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, அதேபோன்று இவ்வாறான அரசுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையை கொண்டுவர முடியாது இருக்கும் எதிர்க்கட்சியும் அந்த சாதனைக்குள் கொண்டு செல்லப்பட வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.**

நாடாளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்ற அமைச்சர் உதய கம்மன்பிலவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான இரண்டாம் நாள் விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்:

நிலையியல் கட்டளைக்கு அமைய நான் முன்வைத்த திருத்தம் அனைவருடனும் தொடர்புடையது. எரிபொருள் விலை அதிகரிப்புக்கு பொறுப்புக்கூற வேண்டியவர்களில் ஒருவரே விடயத்துக்கு பொறுப்பான அமைச்சர். ஆனால் விலையை அதிகரிக்க வேண்டியவர் நிதி அமைச்சரே ஆகும். நிதி அமைச்சரே அரசில் அது தொடர்பில் தீர்மானிப்பார். இதனால் அவரும் இதற்கு பொறுப்புக்கூற வேண்டும்.

இதேவேளை இந்த விடயம் வாழ்க்கைச் செலவு குழுவில் கலந்துரையாடப்பட்டதாகவும் கூறப்பட்டது. இதன்படி அதில் உள்ள அமைச்சர்களும் அதில் தொடர்புபட வேண்டும். அத்துடன் அமைச்சரவையும் அதில் உள்ளடக்கப்பட வேண்டும். அதேபோன்று புதிய நிதி அமைச்சரவையும் இதில் உள்ளடக்கப்பட வேண்டும். அவர் மீண்டும் விலையைக் குறைக்க நடவடிக்கையெடுக்கவில்லை. ஆனால் ஜனாதிபதியும் இதற்கு பொறுப்பானவர் என்றாலும் அவரை இதில் உள்ளடக்கவில்லை. அவருக்கு எதிராக குற்றப் பிரேரணையே கொண்டுவர முடியும். இந்நிலையில் அமைச்சரவையில் அனைவரும் இதில் தொடர்புபட்டுள்ளதால் அவர்கள் இதற்கு பொறுப்புக்கூற வேண்டும்.

இந்நிலையில் இந்த விடயம் தொடர்பில் நான் முன்வைத்த கருத்துக்களுக்கு எதிர்க்கட்சியில் உள்ளவர்கள் என்னை விமர்சித்தமை தொடர்பில் நான் கவலையடைகின்றேன்.

சாகர காரியவசம் முன்வைத்த கருத்தை அடிப்படையாகக் கொண்டே இந்த பிரேணை முன்வைக்கப்பட்டது. அவர் அந்த கருத்தை வாபஸ் பெற்றுக்கொண்டுள்ளார். இப்போது அமைச்சர்கள் அனைவரும் ஒன்றாக உள்ளனர். அரசு முழுமையாக ஒற்றுமையாக இருக்கின்றனர். இதனாலேயே நான் இந்த திருத்தத்தை முன்வைத்தேன்.

நாட்டின் பொருளாதார நெருக்கடி காரணமாகவே எரிபொருள் விலை அதிகரித்துள்ளது. இதற்கு அமைச்சர்கள் அனைவரும் பொறுப்புக் கூற வேண்டியுள்ளனர். இரசாயன உரத்தை கொண்டுவர பணம் இல்லாத காரணத்தாலேயே இவர்கள் சேதன உரம் பற்றி பேசுகின்றனர். பொருள்களை இறக்குமதி செய்யவும் அந்நியசெலாவணி இல்லை. 10 மாதங்களுக்குள் இந்த அரசு மிகப் பெரிய பிரச்சனைகளை ஏற்படுத்தியுள்ளது. இதனால் இந்த அரசு கின்னஸ் சாதனைக்குள் உள்வாங்கப்பட வேண்டும். இவ்வாறு நாட்டை சிக்கல்களுக்குள் கொண்டுவந்த அரசுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையை கொண்டு வரமுடியாது என்றால் எதிர்க்கட்சியும் கின்னஸ் சாதனைக்குள் செல்லவேண்டும்.

இந்நிலையில் நம்பிக்கையில்லாப் பிரேரணையை அரசுக்கு எதிராக கொண்டுசெல்ல வேண்டும் என்பதே எனது நிலைப்பாடாக உள்ளது. எனினும் அமைச்சருக்கு எதிரான பிரேரணைக்கு ஆதரவாகவே வாக்களிப்பேன்- என்றார். (ஒ.22)

# இணக்கப்பாடுகளை ஏற்படுத்தி ஒன்றாகப் பயணிப்போம்

## அறைகூவல் விடுக்கிறார் மைத்திரி

கொழும்பு, ஜூலை 21

தேசிய இணக்கப்பாடுகளை ஏற்படுத்திக் கொண்டு அனைவரும் ஒன்றாக பயணிப்பதன் மூலமே பிரச்சினைகளில் இருந்து நாட்டை மேலெழுப்ப முடியும் என்று முன்னாள் ஜனாதிபதியும் நாடாளுமன்ற உறுப்பினருமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க் கிழமை நடைபெற்ற அமைச்சர் உதய கம்மன்பிலவுக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை மீதான இரண்டாம் நாள் விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே முன்னாள் ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பில் எமது அரசியலில் வரலாறுகள் உள்ளன. எமது அரசமைப்பில் வழங்கப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய நம்பிக்கையில்லாப் பிரேரணை அன்று முதல் இன்று வரையில் இடம்பெற்றுவருகின்றது.

இந்நிலையில் இந்த நம்பிக்கையில்லா பிரேரணையில் குறிப்பிடப்பட்டுள்ள உதய கம்மன்பிலவை பதவி விலக்கக் கூடிய காரணங்கள் எதுவும் இல்லை.

இதில் எதிர்க்கட்சிக்கும் அரசுக்கும் இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை மூலம் கிடைக்கும் நன்மை என்னவென்று பார்த்தால் இது அரசு வெற்றி பெறும் பிரேரணையோ, தோல்வியடையும் பிரேரணையோ கிடையாது. அப்படியாயின் இந்த பிரேரணையின் மூலம் எதிர்க்கட்சியினருக்கு குற்றச்சாட்டுகளை முன்வைக்கவும், அவற்றுக்கு பதிலளிக்கவும் வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது. இதேவேளை இன்று ஏற்பட்டுள்ள உரம், கல்வி மற்றும் தடுப்பூசி உள்ளிட்ட விடயங்களில் அரசு பிரச்சினைகளை எதிர்நோக்க அதன்பின்னால் உள்ள பொருளாதார ரீதியிலான பிரச்சினைகளே காரணம் என்பதனை ஏற்றுக்கொள்ள வேண்டும். இதனால் இப்போது ஏற்பட்டுள்ள பொருளாதார நிலைமை இப்போது ஏற்பட்டதல்ல. பல வருடங்களுக்கு முன்பிருந்து ஏற்பட்டது.



இதேவேளை இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையில் அரச வங்கிகளில் அரசு கடன் வாங்கியமை தொடர்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வாறு அரச வங்கிகளில் கடன் வாங்காத அரசு இருக்க முடியாது. இது இரகசியமானது அல்ல. எனது ஆட்சிக் காலத்திலும் கடன் பெற்றுக்கொள்ளப்பட்டன. அதற்கு முன்னரான அரசுகளும் கடன் பெற்றுள்ளது. இவை அனைத்தும் எமது நிதி முகாமைத்துவத்தின் போது கவனம் செலுத்தி செயற்பட வேண்டும்.

அதேபோன்று எமது ஏற்றுமதி வருமானமும், கொவிட் பரவலால் ஏற்பட்ட பொருளாதார வீழ்ச்சியும் ஏற்பட்டுள்ள நேரத்தில் ஜனநாயக வரையறைக்குள் ஆர்ப்பாட்டங்கள் உள்ளிட்ட போராட்டங்களை நடத்துவது ஜனநாயக உரிமையாகும். அது பிரச்சனையல்ல. அந்த சுதந்திரம் மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. ஆனால் நாங்கள் இந்தப் பிரச்சனைகளுக்கு எப்படி தீர்வு காண்பது என்பது தொடர்பாக சிந்திக்க வேண்டும்.

இதேவேளை எரிபொருள் விலை அண்மையில் அதிகரிக்கப்பட்டது. இதுவரையில் எரிபொருள் விலைகளை அதிகரிக்காத அரசுகள் இருக்க முடியாது. அனைத்து அரசுகளிலும் இதன்மூலம் கிடைக்கும் வருமானம் அனைத்து விடயங்களுக்கும் பயன்படுத்தப்படுகின்றது. எமது அரசில் ஆரம்பத்தில் எரிபொருள் விலையை குறைத்து இறுதியில் அதிகரிக்க நேரிட்டது. இதனால் உதய கம்மன்பிலவை அமைச்சர் பதவியில் இருந்து விலக்கும் அளவுக்கு எரிபொருள் விலை அதிகரிக்கப்பட்டமை தவறாக கூற முடியாது. எந்தவொரு அரசும் தானே விரும்பி அதனை அதிகரிப்பதில்லை. இந்நிலையில் இவ்வாறான நேரத்தில் பொது இணக்கப்பாட்டை ஏற்படுத்திக்கொண்டு செயற்பட வேண்டும்.

அத்துடன் இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையில் மக்கள் வழங்கிய ஆணை மீறப்பட்டுள்ளது என கூறப்பட்டுள்ளது. ஆனால் 2 வருடங்களே ஆன அரசுக்கு இந்தக் குற்றச்சாட்டு பொருத்தமற்றதே. 2 வருடங்களில் தேர்தல் விஞ்ஞாபனத்தை செயற்படுத்த முடியாது. இந்தப் பிரச்சினை எல்லா அரசுகளும் முகம்கொடுக்கும் விடயமாகும்.

இதன்படி இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையில் கூறப்பட்டுள்ள விடயங்கள் ஏற்றுக்கொள்ளக் கூடியவை அல்ல. இந்த நேரத்தில் நாங்கள் தேசிய இணக்கப்பாடுகளை ஏற்படுத்திக்கொண்டு பிரச்சினைகளில் இருந்து மெலெழ நாட்டில் அனைவரும் பங்களிப்பை செய்வோம் என்று கோரிக்கைகளை முன்வைக்கின்றேன் என்பதுடன் இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு எதிராகவே சிறிலங்கா சுதந்திரக் கட்சி வாக்களிக்கும் என்பதனை கூறிக் கொள்கின்றேன்- என்றார். (ஒ.22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீருவில் கிராம அலுவலர் பிரிவில் 13 பேருக்கு கொரோனாத் தொற்று



**வல்வெட்டித்துறை, ஜூலை 21**

**வல்வெட்டித்துறை தீருவில் கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த 13 பேருக்கு கொரோனாத் தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.**

வல்வெட்டித்துறை ஆதிகோவிலடி கிராமத்தில் அடையாளம் காணப்பட்ட தொற்றாளர்களுடன் தொடர்பை பேணியிருக்கலாம் என்ற சந்தேகத்தில் தீருவில் கிராமத்தில் எழுமாறாக 100 பேரிடம் நேற்றுமுன்தினம் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. இதில் 13 பேருக்கு கொரோனாத் தொற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

வல்வெட்டித்துறை வடமேற்கு கிராமம் ஏற்கனவே தனிமைப்படுத்தப்பட்டுள்ள நிலையில், நாவலடி மற்றும் தீருவில் ஆகிய கிராமங்களிலும் தற்போது தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். (ஐ-26,20)

## தென்மராட்சி பிரதேச செயலகத்தின் மற்றொரு அலகும் நேற்று பூட்டு

சாவகச்சேரி.ஜூலை 21

தென்மராட்சி பிரதேச செயலகத்தின் மற்றொரு அலகும் நேற்று சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்தினரால் மூடப்பட்டது.

பிரதேச செயலகத்தின் வெளிக்கள அலுவலர்களுக்கான அலகே இவ்வாறு மூடப்பட்டது. இங்கு கடமையாற்றிய பெண் வெளிக்கள அலுவலருக்கு கடந்த ஞாயிற்றுக்கிழமை காய்ச்சல் ஏற்பட்டதையடுத்து சாவகச்சேரி மருத்துவமனையில் மேற்கொள்ளப்பட்ட அன்டிஜென் பரிசோதனையில் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

இதனையடுத்து சுகாதாரப் பகுதியினரின் அறிவுறுத்தலின் பிரகாரம் குறித்த வெளிக்கள அலுவலர் அலகு நேற்று மூடப்பட்டது. (ஐ-9)

## டெங்கை கட்டுப்படுத்த அனைவரும் முன்வரவும்

*சுகாதாரப் பிரிவினர் அறிவிப்பு*


வவுனியா,ஜூலை 21

வவுனியாவில் பரவலாக மழையுடனான காலநிலை நிலவி வருவதால் பொதுமக்கள் தமது குடியிருப்புக்களை துப்புரவாக வைத்திருப்பதுடன்,டெங்கு நுளம்பு பெருகாமல் இருக்க அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் என்று சுகாதாரப் பகுதியினர் அறிவுறுத்தியுள்ளனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்;

மேல் மாகாணத்தில் டெங்கு நுளம்பு தாக்கம் அதிகரித்து காணப்படுகின்றது. வவுனியாவில் இருந்து பல்வேறு தேவைகளுக்காக மேல் மாகாணங்களுக்கு சென்று வருபவர்கள் மிகவும் அவதானமாக இருக்க வேண்டும்.

கொரோனாவுக்கான அறிகுறிகளும், டெங்கு நோய்த் தொற்று அறிகுறிகளும் ஒரே மாதிரியாகவே காணப்படுகின்றன. எனவே பொதுமக்கள் தமது குடியிருப்புக்களை துப்புரவுசெய்து டெங்கு நுளம்பு பெருகாமல் இருக்க அனைவரும் ஒத்துழைக்க வேண்டும்-என்றனர். (ஐ-110)



## ரிஷாத் எம்.பியின் வீட்டில் பணிபுரிந்த சிறுமியின் இறப்புக்கு நீதி வேண்டும்

*யாழ்ப்பாணத்தில் போராட்டம்*

யாழ்ப்பாணம், ஜூலை 21

நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீனின் வீட்டில் பணிப்பெண்ணாக பணிபுரிந்த சிறுமியின் இறப்புக்கு நீதி வேண்டி யாழ்ப்பாணத்தில் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலையத்துக்கு முன்பாக மலையகத்தைச் சேர்ந்த ஒருவரே குறித்த கவனவீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்துள்ளார்.

"குறித்த சிறுமியின் இறப்புக்கு நீதி வேண்டும், ஜனாதிபதி நேரடியாக தலையிட்டு சிறுமியின் இறப்புக்கு நீதி பெற்றுத்தர வேண்டும் மற்றும் சிறுமியின் இறப்பு விசாரணை அறிக்கை நேரடியாக ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட வேண்டும் ஆகிய கோரிக்கைகளை முன்வைத்து குறித்த நபர் போராட்டத்தில் ஈடுபட்டார்.

நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத்தின் வீட்டில் பணிப்பெண்ணாக பணிபுரிந்த 16 வயதுச் சிறுமி ஒருவர் தீக்காயங்கள் ஏற்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்தார். இதனையடுத்து உயிரிழந்த குறித்த சிறுமிக்கு என்ன நடந்தது என்பதை வலியுறுத்தி நாடளாவிய ரீதியில் போராட்டங்கள் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ-20.26)

## 40 குடும்பங்களுக்கு உணவுப்பொருள்கள்

முல்லைத்தீவு.ஜூலை 21

முல்லைத்தீவு அளம்பில் தங்கபுரம் கிராமத்தைச் சேர்ந்த சுமார் 40 குடும்பங்களுக்கு தலா மூவாயிரம் ரூபா பெறுமதியான உலர் உணவுப்பொருள்கள் வழங்கப்பட்டன.

வன்னி மேம்பாட்டு பேரவையின் ஒழுங்கமைப்பில் கனடாவைச் சேர்ந்த ராஜ்குமார் கௌசி தம்பதிகளின் நிதிப் பங்களிப்பில் இந்த உதவிகள் வழங்கப்பட்டன.

கரைதுறைப்பற்று பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் தவராஜா, வடக்கு மாகாண முன்னாள் விவசாய அமைச்சர் க.சிவநேசன், சாவகச்சேரி நகர சபையின் முன்னாள் உறுப்பினர் ஞா.கிஷோர் மற்றும் குடும்ப நலனோம்பு அமையத்தின் வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்பாளர் இ.தயாபரன் ஆகியோர் இணைந்து பயனாளிகளிடம் உதவிப் பொருள்களை வழங்கினர். (ஐ-159)





## கௌதாரிமுனையின் மண்திட்டி அகற்றப்பட்டதையடுத்து மேலும் ஒரு பஸ் சேவை ஆரம்பம்

கிளிநொச்சி,ஜூலை 21

கிளிநொச்சி - பூநகரி கௌதாரிமுனையின் முதன்மை வீதியில் போக்குவரத்துக்கு இடையூறாக காணப்பட்ட மணல் திட்டு அகற்றப்பட்டதையடுத்து, குறித்த பகுதியூடாக போக்குவரத்துக்கு மேலும் ஒரு பஸ்சேவை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

கிளிநொச்சி பூநகரி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கௌதாரிமுனை மண்ணித்தலை மற்றும் கல்முனை போன்ற பகுதிகளுக்கான முதன்மை வீதியாக கௌதாரிமுனை கல்முனை வீதி காணப்படுகிறது.

குறித்த வீதி நீண்டகாலமாக சீரமைப்பு இன்றிக் காணப்படுவதுடன், மண்ணித்தலை பகு[illegible] யும் மண[illegible] துக்கு மேலாக வீதியை மூடி மணல் படர்ந்து காணப்பட்டது.

இதனால் கடந்த ஆறு மாதங்களாக போக்குவரத்தில் பல்வேறு இடர்பாடுகள் காணப்பட்டதுடன் இப் பகுதிக்கான ஒரே ஒரு பஸ் சேவையும் மண்ணித்தலையுடன் நிறுத்தப்பட்டிருந்தது.

இந்த நிலையில் கல்முனை மற்றும் மண்ணித்தலை ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 40 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் மற்றும் கடற்றொழிலாளர்கள் போக்குவரத்தில் பெரும் சிரமங்களை எதிர்கொண்டுவந்தனர்.

தற்போது குறித்த மணல் திட்டு போக்குவரத்துக்கு ஏற்ற வகையில் அகற்றப்பட்டுள்ளது. அத்துடன் குறித்த வீதியூடாக மேலும் ஒரு பஸ் சேவையும் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ-113)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனியார் பஸ் ஊழியர்களுக்கு இரண்டு மாதங்கள் சம்பளம்

## அரசிடம் கோரிக்கை



**கொழும்பு,ஜூலை 21**

**தனியார் பஸ் ஊழியர்களுக்கு இரண்டு மாதங்கள் 15 ஆயிரம் ரூபா வீதம் சம்பளம் வழங்குமாறு, அரசிடம் கோரிக்கை முன்வைக்கப் பட்டுள்ளது.**

தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளது.

கொரோனாத் தொற்று நிலைமையை அடுத்து, சுமார் ஒரு வருட காலமாக தனியார் பஸ் சேவையில் ஈடுபட்டுள்ள சுமார் 60 ஆயிரம் பேர் கடுமையான பொருளாதார நெருக்கடிகளைச் சந்தித்துள்ளனர் என்று சங்கத்தின் பொதுச் செயலாளர் அஞ்சன பிரியஞ்ஜித் தெரிவித்துள்ளார்.

இலங்கை போக்குவரத்துச் சபை ஊழியர்களுக்கு வழங்கப்படுவது போன்று குறைந்தது இரண்டு மாதங்களுக்காவது, தனியார் பஸ் ஊழியர்களுக்கு 15 ஆயிரம் ரூபா வீதம் உதவித்தொகை வழங்கப்பட வேண்டும் என்றும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (ஒ.4)



# ஷங்காய் விமானங்கள் இரு வாரங்கள் நிறுத்தம்

கொழும்பு,ஜூலை 21

கொழும்பிலிருந்து ஷங்காய் செல்லும் சீன ஈஸ்டர்ன் ஏயர்லைன்ஸின் விமானங்கள், எதிர்வரும் 26ஆம் திகதியிலிருந்து இரண்டு வாரங்களுக்கு இடைநிறுத்தப்படும் என்று சீனாவின் சிவில் விமான போக்குவரத்துக் கட்டுப்பாட்டாளர் அறிவித்துள்ளார்.

கொழும்பிலிருந்து தென்மேற்கு சீனாவின் யுனான் மாகாணத்தில் உள்ள குன்மிங்க்கு பயணித்த விமானத்தில் ஆறு பயணிகள் கொரோனாத் தொற்றுக்குள்ளாகியிருந்தனர்.

இதனையடுத்து விமான சேவைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன என்று சீனாவின் சிவில் விமான அதிகாரசபை தெரிவித்துள்ளது.

அதேவேளை கொழும்பு குன்மிங் விமானம் அடுத்த வாரம் முதல் இரத்துச்செய்யப்படும் என்று சீனாவின் சிவில் விமான அதிகாரசபை அறிவித்துள்ளது. (ஒ.4)



# மாடியிலிருந்து வீழ்ந்த இளம்பெண் உயிரிழப்பு

கொழும்பு,ஜூலை 21

இரத்மலானை கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழக கட்டடத் தொகுதியின் 6 ஆம் மாடியிலிருந்து வீழ்ந்து, இளம் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீட முகாமைத்துவ உதவியாளர் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்த பெண், பாணந்துறை பகுதியைச் சேர்ந்த 31 வயதுடையவர் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ஒ.4)

# தண்ணீருக்கு மேலாக சுற்றுலா விடுதிகள்



கொழும்பு,ஜூலை 21

புத்தளம், கற்பிட்டி பகுதியில் தண்ணீருக்கு மேலாக சுற்றுலா வீடுகள் மற்றும் விடுதிகளை நிர்மாணிப்பதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

உலகளாவிய ரீதியில் சுற்றுலாத்துறையில், சுற்றுலாப் பயணிகளைக் கவர்ந்திழுக்கும் வகையில் சில நாடுகள் தண்ணீருக்கு மேலான சுற்றுலா விடுதிகளை அறிமுகப்படுத்தியுள்ளன.

அதற்கமைவாக கற்பிட்டி மற்றும் ஏனைய கடலோரப் பிரதேசங்களில் சுற்றுலாத்துறை மேம்பாட்டுக்காக தண்ணீருக்கு மேலான சுற்றுலா வீடுகள் மற்றும் விடுதிகள் அமைக்கப்படவுள்ளன.

சுற்றுலாத்துறை மேம்பாட்டுக்காக குறித்த பிரதேசத்தில் அமைந்துள்ள 12 தீவுகள் சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகார சபைக்கு தற்போது வழங்கப்பட்டுள்ளன.

அதற்கமைய, கற்பிட்டி பிரதேசத்தில் வெள்ளை I, II மற்றும் III போன்ற தீவுகளை நீண்டகாலக் குத்தகைக்குப் பெற்றுக்கொண்டுள்ள வரையறுக்கப்பட்ட சன் ரிசோட் இன்வெஷ்ட்மென்ட் லங்கா (தனியார்) நிறுவனம், தண்ணீருக்கு மேலான சுற்றுலா வீடுகள் மற்றும் விடுதிகளுடன் கூடிய 50 அதிசொகுசு சுற்றுலா விடுதிகளை நிர்மாணிப்பதற்கு சமர்ப்பித்துள்ள கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக, சுற்றுலாத்துறை அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (ஒ.4)



# பிள்ளைகள் மீது கொடூர தாக்குதல்

## தந்தை கைது

கொழும்பு,ஜூலை 21

தனது பிள்ளைகள் இருவரை, மனிதாபிமானமற்ற முறையில் கொடூரமாகத் தாக்கினார் என்ற குற்றச்சாட்டில் தந்தையொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

புத்தல உடகம பிரதேசத்தைச் சேர்ந்த நபர் ஒருவர், மதுபோதையில் வீட்டுக்கு வந்து, தனது 6 மற்றும் நான்கரை வயதான பிள்ளைகள் இருவரையும் மனிதாபிமானமற்ற முறையில் தாக்கியுள்ளார்.

இது தொடர்பில் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலை அடுத்து, சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

தாக்குதலுக்கு இலக்கான இரண்டு சிறுவர்களும் புத்தல பிரதேச மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (ஒ.4)

# கொரோனாவிலிருந்து விடுபட வழிபடுங்கள்

## ஹஜ் பெருநாள் வாழ்த்தில் பிரதமர்

கொழும்பு,ஜூலை 21

இஸ்லாமிய வழிகாட்டுதல்களை சரியாகப் பின்பற்றி, உலக மக்கள் அனைவரும் கொரோனாத் தொற்றிலிருந்து குறுகிய காலத்துக்குள் விடுபட வேண்டும் என்று அல்லாஹ்வை பிரார்த்திப்போம்.

இவ்வாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ச ஹஜ் பெருநாள் வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தியாகம் மற்றும் ஒற்றுமைக்கு முன்னுரிமை அளித்து இன்றைய தினம் கொண்டாடப்படும் ஈதுல் அல்ஹா ஹஜ் பெருநாளை கொண்டாடும் உலக வாழ் இஸ்லாமியர்கள் அனைவருக்கும் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சமூக சகவாழ்வின் மகிமையை உலக சமூகத்துக்கு எடுத்துரைக்கும் ஒரு முக்கிய சமய விழாவாக ஹஜ் பெருநாள் அமைகின்றது.

கொரோனாத் தொற்றுக் காரணமாக கடந்த ஆண்டு போன்றே இம்முறையும் வழமை போன்று மக்காவுக்கான யாத்திரை மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

எனினும், சமாதானம், சகோதரத்துவம் மற்றும் சமத்துவத்தை மதிக்கும் ஹஜ் பிரார்த்தனைகளுக்கு எவ்வித தடையும் ஏற்படாது என்பது எனது நம்பிக்கையாகும்.

பள்ளிவாசல்களில் ஒன்றுகூடி மத வழிபாடுகளில் ஈடுபட வேண்டாம் என்ற சுகாதார துறையினரின் ஆலோசனைகளுக்கு ஏற்ப, நாம் அனைவரும்



ஒன்றிணைந்து செயற்பட வேண்டும். - என்றார். (ஒ.4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முரண்பாடுகள் இருப்பினும் காட்டிக்கொடுக்க மாட்டோம்

## நீதியமைச்சர் நம்பிக்கை



கொழும்பு,ஜூலை 21

அரசுக்குள் கருத்து முரண்பாடுகள் இருந்தாலும், எவரையும் காட்டிக்கொடுக்கப் போவதில்லை என்று நீதி அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பிலவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான முதல் நாள் விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே, அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கடந்த நல்லாட்சி அரசின் காலத்தில் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்திருந்தது. தேசியப் பாதுகாப்பும் காட்டிக்கொடுக்கப்பட்டது. எனினும், தற்போதைய அரசு ஆட்சிக்கு வந்ததன் பின்னர் இவை அனைத்தும் சரிசெய்யப்பட்டுள்ளன. நாட்டு மக்களுக்கும் வரிகளைக் குறைத்து நிவாரணங்களை வழங்கியுள்ளோம்.

பொருளாதாரத்தை வலுப்படுத்தவே இவ்வாறான நிவாரணங்கள் வழங்கப்பட்டன. எனினும், எதிர்பாராத விதமாக நாடு கொரோனாத் தொற்றுக்கு முகங்கொடுக்க நேரிட்டது. கொரோனா வைரஸ் பரவலுக்கு மத்தியில் நாட்டை நிர்வகிப்பதற்கு நிதி அவசியம்.

இந்தியா, சீனா ஆகிய நாடுகளை விட அதிகளவான வேகத்தில் தடுப்பூசிகள் இலங்கையில் செலுத்தப்படுகின்றன. ஓகஸ்ட் மாத இறுதிக்குள் 30 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கும், வருட இறுதிக்குள் 18 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கும் தடுப்பூசிகள் செலுத்தப்படும். மீண்டும் நாட்டின் பொருளாதாரம் கட்டியெழுப்பப்படும் - என்றார். (ஒ.4)

# இன்று முதல் விசேட சோதனை



கொழும்பு,ஜூலை 21

இந்த வாரத்தின் நீண்ட விடுமுறை நாள்களைக் கருத்தில் கொண்டு, இன்று புதன்கிழமை தொடக்கம் நாடளாவிய ரீதியில் சிறப்புத் தனிமைப்படுத்தல் சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

மேல் மாகாணத்தில் இருந்து வெளியேறும் பகுதிகள் மற்றும் ஏனைய மாகாணங்களில் இருந்து வெளியேறும், உள்நுழையும் பகுதிகளில் விசேட கண்காணிப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்.

மேல் மாகாணம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் முகக்கவசம் தொடர்பில் மேலதிக கண்காணிப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்.

இதேவேளை, மாகாணங்களுக்கு இடையே பயணிப்பதற்கு தொடர்ந்தும் தடை விதிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஒ.4)

## பேர்ள் கப்பல் விவகாரம்

# இறப்புக்களை ஆராய சர்வதேசத்தின் உதவி

கொழும்பு,ஜூலை 21

இலங்கைக் கடற்பரப்பில் எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் தீ விபத்துக்குள்ளானதன் பின்னர், அறிவிக்கப்பட்ட கடல்வாழ் உயிரினங்களின் இறப்புகள் தொடர்பில் ஆராய்வதற்கு சர்வதேசத்தின் உதவியை நாட அரசு தீர்மானித்துள்ளது.

கப்பல் தீ விபத்துக்குள்ளான பின்னர் நாட்டுக்கு ஏற்பட்ட பாதிப்பு மற்றும் சேதம் தொடர்பில், அனைத்து துறைகளையும் உள்ளடக்கிய கலந்துரையாடல் நீதி அமைச்சர் அலி சப்ரி தலைமையில் இடம்பெற்றது.

இதில் சம்பவம் தொடர்பான விசாரணை களின் முன்னேற்றம் ஆராயப்பட்டது.

தீ விபத்துக் காரணமாக தொழிலை இழந்து பாதிக்கப்பட்ட மேல் மாகாண மீனவர்களுக்கு இழப்பீடு வழங்கவும், பிற மாவட்டங்களில் பாதிக்கப்பட்ட மீனவர்களிடமிருந்து பெறப்பட்ட தகவல்களின் துல்லியத்தை ஆராய்ந்து இழப்பீடு வழங்கவும் முடிவெடுக்கப்பட்டது.

இதுவரை பெறப்பட்ட இழப்பீடுகள், பாதிக்கப்பட்ட மீனவர்களின் வங்கிக் கணக்குகளுக்கு வரவு வைக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

தீ விபத்தின் காரணமாக மாசுபட்ட கடற்கரைகளைச் சுத்தம் செய்தல், இழப்பீட்டின் சட்டபூர்வ நிலை, மீனவர்களுக்கு இழப்பீடு, கடல் உயிரினங்களின் மரணம் மற்றும் சர்வதேச வழக்கறிஞர்களின் உதவி ஆகியவை தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டன. (ஒ.4)



# மலையகச் சிறுமி விவகாரம் நீதிமன்று விடுத்துள்ள உத்தரவு

கொழும்பு,ஜூலை 21

நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீனின் மனைவி உள்ளிட்ட 4 பேரின் தொலைபேசி உரையாடல் பதிவுகளை, பொலிஸில் ஒப்படைக்குமாறு தொலைபேசி சேவை வழங்குநர்களுக்கு கொழும்பு நீதவான் நீதிமன்ற மேலதிக நீதவான் ரஜீந்திர ஜயசூரிய உத்தரவிட்டுள்ளார்.

பொரளை பொலிஸாரால் நகர்வுப்பத்திரம் மூலம் மேற்கொள்ளப்பட்ட கோரிக்கையையடுத்து இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

பொரளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் உள்ள ரிஷாத் பதியுதீனின் வீட்டில் பணிபுரிந்து வந்த டயகம பகுதியைச் சேர்ந்த சிறுமி, கடந்த 16 ஆம் திகதி உயிரிழந்திருந்தார்.

குறித்த சிறுமி கடந்த 2020 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் ரிஷாத் வீட்டுக்கு அழைத்துவரப்பட்டுள்ளார். (ஒ.4)

# மாலைதீவு ஜனாதிபதி இலங்கைக்கு வருகை



கொழும்பு,ஜூலை 21

மாலைதீவு ஜனாதிபதி இப்ராஹிம் மொஹமட் சொலிவ், 3 நாள்கள் உத்தியோக பூர்வ பயணமாக, இலங்கைக்கு வருகை தந்துள்ளார்.

மாலைதீவின் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் உயர் அதிகாரிகள் 15 பேருடன், நேற்று முற்பகல் 11.30 மணியளவில் அவர் இலங்கையை வந்தடைந்தார்.

சிறிலங்கன் விமான நிறுவனத்தின் யூ.எல். 102 என்ற விமான சேவையூடாக இவர்கள் இலங்கையை வந்தடைந்தனர். (ஒ.4)

# ரிஷாத்துக்கு சார்பாக ஐக்கிய மக்கள் சக்தி

## அமைச்சர் மஹிந்தானந்த குற்றச்சாட்டு



கொழும்பு,ஜூலை 21

ஐக்கிய மக்கள் சக்தி ரிஷாத்தின் பணத்திலேயே இயங்கி வருகின்றது. அந்தக் கட்சிக்கு ரிஷாத்தே நிதி உதவி செய்கிறார். எனவே, ரிஷாத்தைப் பாதுகாப்பதைத் தவிர, சஜித்துக்கு வேறு வழியில்லை என்று அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் அமைச்சர் உதய கம்மன்பிலவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான முதல்நாள் விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே, அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், ரிஷாத் பதியுதீன் அமைச்சராக இருந்தபோது அவருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்றைக் கொண்டுவந்தோம். அப்போது முஸ்லிம் அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள் அனைவரும் ரிஷாத்துக்காக தமது பதவிகளை இராஜினாமா செய்திருந்தனர். தற்போது அவர்கள் எங்கே இருக்கிறார்கள்?

இந்த நிலையில் ரிஷாத் வீட்டில் பணி புரிந்த சிறுமி ஒருவர் துஷ்பிரயோகப்படுத்தப்பட்டு, தீக்காயங்களுடன் உயிரிழந்துள்ளார். இந்த விடயத்தை தெரிந்து கொண்ட ரிஷாத் அச்சத்தில் மருத்துவமனைக்கு சென்றுள்ளார்.

இது தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸவும் எதையும் கூறவில்லை.

ரிஷாத்துக்கு எதிராக இது மட்டுமல்ல, சதொசவில் கோடிக்கணக்கான பண ஊழல் தொடர்பிலும், உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்கள் தொடர்பிலும் குற்றச்சாட்டுக்கள் உள்ளன.

முடிந்தால் ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்து ரிஷாத்தை விலக்க வேண்டும். ஆனால், சஜித், ரிஷாத்தை விலக்கப்போவதில்லை - என்றார். (ஒ.4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹிசாலினியின் உயிரிழப்புக்கு நீதியான விசாரணை வேண்டும்

## மன்னார் மாவட்ட மாதர் ஒன்றியத் தலைவி தெரிவிப்பு

**மன்னார்,ஜூலை 21**
**சிறுமி ஹிசாலினியின் உயிரிழப்புக்கு நீதியான விசாரணை மேற்கொண்டு குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும் என்று மன்னார் மாவட்ட மாதர் ஒன்றியத் தலைவி திருமதி மகாலட்சுமி குருசாந்தன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.**

நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீனின் இல்லத்தில் வீட்டு வேலை செய்து வந்த மலையகத்தைச் சேர்ந்த ஹிசாலினி என்ற 16 வயது சிறுமி சில நாள்களுக்கு முன்னர் தீக்காயங்களுடன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் உயிரிழந்தார்.
இது தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்,
எந்த இனத்தை சார்ந்த பெண்ணாக இருந்தாலும் இந்த சிறுமியின் உயிரிழப்புக்கு நீதியான விசாரணை தேவை. பாலியல் துன்புறுத்தல்கள் நடைபெற்றுள்ளன என தெரிவிக்கப்பட்டுள்ளது. ஒரு உயிர் போகுமளவுக்கு கொடூரமான வேலை செய்தவர்களை சட்டத்தின் முன் நிறுத்தி உரிய தண்டனை பெற்றுக்கொடுக்க வேண்டும். இந்த விடயத்தில் சிறுவர்கள், பெண்களுக்காக குரல் கொடுக்கும் எங்கள் அமைப்பு ஒரு நாளும் பின் நிற்கமாட்டாது. இது தொடர்பான விசாரணையானது பல கோணங்களில் நடத்தப்பட வேண்டும் நீதிக்காக போராடும் எவரும் இந்த விடயத்தில் விலை போகக் கூடாது. நாட்டின் பெண்களுக்கு எதிராக நடக்கின்ற வன்முறைகளால் பெண் சமுதாயம் பின்னோக்கி சென்று கொண்டிருக்கின்றது.
எனவே சிறுமிகளை மற்றும் பெண்களை பாலியல் வன்கொடுமைகள் செய்பவர்களையும் சமூக வலைத்தளங்களின் மூலம் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்குபவர்களையும் தராதரம் பாராது சட்டத்தின் முன் நிறுத்தி தண்டனை பெற்றுக் கொடுக்க வேண்டிய கடமை அனைவருக்கும் உண்டு- என்றார். (ஐ-213)



# இணைய கல்வி செயற்பாட்டுக்கு மாணவிக்கு 'போன்' கையளிப்பு

கொடிகாமம்,ஜூலை 21
பொருளாதாரம் நலிவடைந்த மாணவி ஒருவருக்கு இணையவழிக் கல்விச் செயற்பாட்டுக்காக கைத் தொலைபேசி ஒன்று நேற்றுமுன்தினம் வழங்கப்பட்டது.
தொண்டமானாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலயத்தில் க.பொ.த சாதாரண தரத்தில் கல்வி பயிலும் மாணவிக்கே மேற்படி உதவி வழங்கப்பட்டது.
ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியின் (புளொட்) ஜேர்மன் கிளை அமைப்பாளர் நல்லதம்பி பவானந்தின் நிதியுதவியில் இந்த உதவி வழங்கப்பட்டது.
நிகழ்வில் வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் பா.கஜதீபன், வலிதெற்கு பிரதேச சபைத் தவிசாளர் க.தர்சன், சாவகச்சேரி நகர சபை முன்னாள் உறுப்பினர் ஞா.கிஷோர் மற்றும் சமூக ஆர்வலர் இ.தயாபரன் ஆகியோர் கலந்துகொண்டனர். (ஐ-159)

# கிளி.மத்திய கல்லூரி மைதானம் துப்புரவு





கிளிநொச்சி,ஜூலை 21
கிளிநொச்சி மத்திய கல்லூரியின் மைதானம் பழைய மாணவர்களின் ஏற்பாட்டில் கடந்த ஞாயிற்றுக்கிழமை துப்புரவுசெய்யப்பட்டது.
நிகழ்வில் கல்லூரியின் பழைய மாணவர்களான மருத்துவர் சத்தியமூர்த்தி, மருத்துவர் சிறிதர், மருத்துவர் குகராஜா, மருத்துவர் தவராசா, மருத்துவர் கோணேஸ் மற்றும் மருத்துவர் மனோகரன் ஆகியோருடன் அதிபர், ஆசிரியர்கள் கலந்துகொண்டனர். (ஐ-159)



தெல்லிப்பழை பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கு வாழ்வாதார மற்றும் பாதுகாப்பு உதவிப் பொருள்கள் என்பவை நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை வழங்கப்பட்டன. (ஐ-9)


# மன்னாரில் பல்கலை மாணவர்களுக்கு தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை ஆரம்பம்


மன்னார்,ஜூலை 21
மன்னார் மாவட்டத்தில் உள்ள பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் கல்வியியல் கல்லூரி பயிலுநர்களுக்கான தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கை நேற்று ஆரம்பமானது.
மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ரி.வினோதன் தலைமையில் தடுப்பூசி ஏற்றப்பட்டது.
மன்னார் மாவட்டத்தை நிரந்தர வதிவிடமாகவும் அதே நேரம் மன்னார் மாவட்ட கல்வி வலயங்களில் கல்வி கற்கின்ற பல்கலைக்கழக மாணவர்கள், கல்வியியல் கல்லூரி மாணவர்கள், உயர் தொழில்நுட்ப கல்லூரி மாணவர்கள் ஆகியோருக்கே தடுப்பூசி செலுத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ-56)



# கோடாவுடன் ஒருவர் கைது

பருத்தித்துறை,ஜூலை 21
கசிப்பு உற்பத்திக்கு பயன்படுத்தும் கோடா மற்றும் உபகரணங்கள் வைத்திருந்த குற்றச்சாட்டில் பருத்தித்துறை வல்லிபுரக் குறிச்சி பகுதியில் வைத்து ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.
பருத்தித்துறை மதுவரித் திணைக்கள அதிகாரிகளுக்கு கிடைத்த இரகசியத் தகவலையடுத்து மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பை அடுத்து சந்தேகநபர் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டார்.
சந்தேகநரிடம் இருந்து 65 லீற்றர் கோடா மற்றும் உபகரணங்களை மதுவரித் திணைக்கள அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர். சந்தேகநபரை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ஐ-26,20)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எல்லாமே நாடகம்!

எரிசக்தி அமைச்சர் உதய கம்மன்பிலவுக்கு எதிராக எதிர்க் கட்சியால் கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரே ரணை நேற்று நாடாளுமன்றில் தோற்கடிக்கப்பட்டிருக் கிறது. ஐக்கிய மக்கள் சக்தியால் கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவாக 61 வாக் குகளும், எதிராக 152 வாக்குகளும் நாடாளுமன்றத்தில் கிடைத்திருக்கின்றன.

இந்த நம்பிக்கையில்லா பிரேரணை தோற்கடிக்கப்பட்டி ருக்கின்றமை தங்களுக்குக் கிடைத்துள்ள பெரும் வெற்றி என்று அரசும், அரசில் அங்கம் வகிப்போரும், ஆதரவா ளர்களும் ஆர்ப்பரித்தாலும், இந்த நம்பிக்கையில்லா பிரேரணை தோற்கடிக்கப்பட்டிருக்கின்றமை இப்போது ஆட்சியில் உள்ள அரசின் உண்மை முகத்தையும், அவர் கள் எவ்வாறு மக்களைத் திசைதிருப்பி ஏமாற்றுகிறார்கள் என்பதையும் பட்டவர்த்தனமாக எடுத்துக் காட்டியிருக் கின்றது என்பதே உண்மை.

இந்த மாத ஆரம்பத்தில் எரிபொருள்களின் விலைகள் நாட்டில் அதிகரிக்கப்பட்டன. நாட்டில் தற்போது கொரோனாத் தொற்று நிலைமையால் மக்கள் பெரும் பொருளாதார நெருக்கடிகளை எதிர்கொண்டிருந்த நேரத் தில் எரிபொருள் விலைகள் அதிகரிக்கப்பட்டமை அர சுக்கு எதிராகப் பெரும் எதிர்ப்பலையைத் தோற்றுவித்தி ருந்தது.

இந்தச் சந்தர்ப்பத்தில் தற்போதைய அரசின் பிரதான கட் சியான சிறிலங்கா பொதுஜன பெரமுன இந்த விலையேற் றத்துக்கு எதிராகப் போர்க்கொடி தூக்கியது. எரிசக்தி அமைச்சர் உதய கம்மன்பில இந்த விலையேற்றத்துக்குப் பொறுப்பேற்று உடனடியாகப் பதவிவிலக வேண்டும் என்று அந்தக் கட்சியின் பொதுச் செயலாளர் சாகர காரி யவசம் மறுநாளே அறிக்கை வெளியிட்டார். இது சர்ச் சையைத் தோற்றுவிக்க சாகரவுக்கு ஆதரவாக கட்சியில் இருந்த பலரும் கருத்துக்களை பகிர்ந்தனர். மக்கள் பக்கம் இருந்தே சாகர பேசியிருக்கிறார் என்று குரல் கொடுத்த னர்.

பிள்ளையையும் கிள்ளி தொட்டிலையும் தானே ஆட்டு வது போல அரசாங்கம் பாசாங்கு செய்தது. இதன் மூலம் எரிபொருள் விலையேற்றம் என்பது கம்மன்பில என்ற தனியொரு நபராலேயே நிகழ்த்தப்பட்டதாகவும், அர சாங்கத்துக்கு இந்த விலையேற்றத்தில் துளியும் விருப்பம் இல்லை என்பது போல காட்டவுமே இப்படி எதிரும், புதிருமான நிலைப்பாட்டை ஆளும் கட்சி உறுப்பினர்கள் முன்னெடுத்திருந்தனர்.

ராஜபக்சக்களின் தாளத்துக்கு ஏற்ப இரு அணியாக பிரிந்து ஆளும் கட்சிக்குள் வாதப் பிரதிவாதங்கள் பறந்து கொண் டிருந்த சமயத்தில் மக்கள் நடப்பது புரியாது குழம்பினர். குட்டை குழம்பிய சமயத்தைப் பயன்படுத்தி, ராஜபக்சக் களின் குடும்பத்தில் ஒருவரான பஸில் ராஜபக்ச மீட்பரா கக் காட்டப்பட்டு நாடாளுமன்றப் பதவியில் அமர்த்தப் பட்டார். இவை ஒருபுறம் நடந்து கொண்டிருக்க, பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி, எரிசக்தி அமைச்சர் உதய கம்மன்பிலவுக்கு எதிராக நாடாளுமன்றத்தில் நம் பிக்கையில்லாப் பிரேரணை ஒன்றைக் கொண்டு வந்தது.

எரிபொருள் விலையேற்றத்துக்கு எதிராக மக்கள் நல னைச் சிந்தித்து சிறிலங்கா பொதுஜன பெரமுனவில் உள்ளவர்கள், நாடாளுமன்றத்தில் அங்கம் வகிப்பவர்கள் குரல் கொடுத்திருப்பார்களேயானால் நேற்று நாடாளு மன்றத்தில் நம்பிக்கையில்லா பிரேரணைக்கு ஆதரவாக அதிக வாக்குகள் கிடைத்திருக்க வேண்டும். ஆனால் மக்கள் நலனுக்காகக் குரல் கொடுத்த அந்த நல்லவர்கள் பிரேரணையை எதிர்த்து வாக்களித்து, எரிபொருள் விலை யேற்றம் சரியெனச் சாதித்துள்ளனர்.

ஆக முன்னர் நடந்தவைகள் அனைத்தும் திட்டமிட்ட, மக்களை முட்டாளாக்கிக் காரியம் சாதிக்கும் கைங்கரி யமே என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை. இந்தப் பிரேரணை தோற்றிருந்தாலும், மக்கள் பிரநிதிகள் என்று கூறிக்கொள்ளும், அரசின் பக்கமிருப்போரின் நாடகங் களை வெளிப்படுத்தியிருக்கின்றது. இவ்வாறானவர்க ளுக்கு அதிகாரங்களைக் கொடுத்திருப்பதால், இன்னும் இன்னும் பல நாடகங்களைப் பார்க்க வேண்டியிருக்க லாம். நாட்டு மக்கள் எப்போது சுதாரித்துக் கொள்கிறார் களோ, அப்போதுதான் நாட்டுக்கும், மக்களுக்கும் சுபிட் சம்.




# ரணிலின் கோரிக்கை: சபாநாயகர் நிராகரிப்பு

**கொழும்பு, ஜூலை 21**

**வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பிலவுக்கு எதிராக பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியால் முன் வைக்கப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஐக்கிய தேசி யக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவால் முன்வைக் கப்பட்ட திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படவில்லை.**

அமைச்சருக்கு எதிராக கொண்டுவரப்பட்ட பிரேரணை அமைச்சரவைக்கு எதிரான பிரே ரணையாக கருதப்பட வேண்டும் என்பதற் கான திருத்தமே ரணில் விக்கிரமசிங்கவால் முன்வைக்கப்பட்டது. எனினும், அதனை ஏற்க சபாநாயகர் மறுத்துவிட்டார்.

இது தொடர்பில் நாடாளுமன்றத்தில் நேற்று சபாநாயகர் அறிவிப்புவேளையின்போது கருத்து வெளியிட்ட சபாநாயகர்,

நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு மேலதி கமாக முன்வைக்கப்பட்டுள்ள திருத்தத்தை ஏற்றுக்கொள்ளமுடியாது என நாடாளுமன் றத் தெரிவுக்குழு தீர்மானித்துள்ளது. அமைச் சருக்குப் பதிலாக அமைச்சரவை என்ற விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது. நேற்று (நேற்று முன்தினம்) ஆரம்பமான விவாதம் அமைச்சர் உதய கம்மன்பிலவை முன்னி லைப்படுத்தி நடத்தப்பட்டது. எனவே, திருத் தத்தை நிராகரிக்க வேண்டியுள்ளது - என் றார். (ஒ.44)

# சுகாதார அதிகாரிகள் பரிந்துரைத்தால் 12 வயதுக்கு மேற்பட்டோருக்கு தடுப்பூசி

கொழும்பு, ஜுலை 21

சுகாதாரத் தரப்பு பரிந்துரை முன்வைத்தால் 12 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கும் தடுப்பூசி வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று இராஜாங்க அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவால் வெளிநாடு களில் 12 வயதுக்கு மேற்பட்ட மாணவர்க ளுக்கு தடுப்பூசி ஏற்றப்படுகின்றது. ஆனால் இங்கு தடுப்பூசி ஏற்றப்படாமல்தான் உயர்தர மாணவர்கள் உயர்தரப் பரீட்சைக்கு முகங் கொடுக்க வேண்டியுள்ளது. எனவே, பரீட்சை நிலையங்களில் அவர்களின் சுகாதாரப் பாது காப்பு எவ்வாறு உறுதிப்படுத்தப்படும், 12 வய துக்கு மேற்பட்டவர்களுக்கு எப்போது தடுப் பூசி ஏற்றப்படும்? என்று எழுப்பப்பட்ட கேள் விகளுக்கு பதிலளிக்கையிலேயே இராஜாங்க அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

12 வயதுக்கு மேற்பட்ட பிள்ளைகளுக்கு தடுப் பூசி ஏற்றுவதாக இருந்தால் அதற்கு இந் நாட்டிலுள்ள சுகாதார அதிகாரிகளின் பரிந்துரை அவசியம். அந்த பரிந்துரை கிடைத்தால் எம் மால் திட்டத்தை செயற்படுத்த முடியும். உதார ணமாக வெளிநாடுகளில் உயர் கல்வி கற்கச் செல்லும் மாணவர்களுக்கு தற்போது தடுப் பூசி ஏற்றப்படுகின்றது. ஐரோப்பியாவுக்கு செல்வதாக இருந்தால் பைஸர் தடுப்பூசியும், சீனா செல்வதாக இருந்தால் சைனோஃ போர்ம் தடுப்பூசியுமே வழங்கப்படவேண்டும்.

அந்தவகையில் சுகாதாரப் பிரிவு பரிந்துரைத் தால் 12 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கும், உயர்தரப்பரீட்சைக்கு தோற்றவுள்ள மாண வர்களுக்கும் நிச்சயம் தடுப்பூசி வழங்கு வோம் - என்றார். (ஒ.44)

# எனது ஆலோசனைகளை கேட்பார் எவருமில்லை

## திஸ்ஸ விதாரன ஆதங்கம்

கொழும்பு, ஜுலை 21

கொரோனாத் தொற்றுத் தொடர்பில், எந்த விதமான கருத்துக்களையும் என்னிடம் எவ ரும் கேட்பதில்லை என்று ஆளுங்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும், வைரஸ் தொடர்பான விசேட நிபுணருமான பேராசிரி யர் திஸ்ஸ விதாரன தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

[illegible] அமைச்சர் சுதர்ஷினி பெர் [illegible] இராஜாங்க அமைச்சராக பொறுப்பேற்றுக்கொண்டபோது, என்னுடன் ஒரு மணித்தியாலம் கலந்துரையாடினார். இதன்போது மாத்திரமே தடுப்பூசிகள் தொடர் பில் என்னிடம் ஆலோசனைகளை கேட்டார். இதனைத் தவிர்ந்த ஏனைய எந்தவொரு சந்தர்ப்பத்திலும் என்னிடம் ஆலோசனைகள் எதனையும் அரச தரப்பினர் கேட்கவில்லை. சுகாதார அமைச்சால் முன்னெடுக்கப்படும் கொரோனா வைரஸ் தடுப்புப் பணிகளின் போதும், வைரஸ் தொடர்பான விசேட நிபுண ரான என்னிடம் எந்தவிதமான ஆலோசனை களும் கேட்கப்படுவதில்லை - என்றார். (ஒ.4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொரோனாத் தொற்றாளர்கள் இரண்டு மடங்காக அதிகரிப்பு

கொழும்பு,ஜுலை 21
கொழும்பு தேசிய மருத்துவமனையில் சிகிச்சை பெறும் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை, தற்போது இரு மடங்காக அதிகரித்துள்ளது என்று மருத்துவர் உபுல் திசாநாயக்க தெரிவித்துள்ளார்.
சுமார் இரண்டு வாரங்களுக்கு முன்பு கொழும்பு தேசிய மருத்துவமனையில் சுமார் 100 கொரோனாத் தொற்றாளர்கள் இருந்தனர். தற்போது அந்த எண்ணிக்கை 200 ஆக உயர்ந்துள்ளது.
இவர்களில் 100 தொற்றாளர்கள் ஒட்சிசனின் உதவியைப் பெறுகின்றனர். தற்போது தொற்றாளர்களின் எண்ணிக்கை வேகமாக அதிகரித்துள்ளது. இதற்கான சரியான காரணத்தைக் கூற முடியாது. பயணக் கட்டுப்பாடு விதிக்கப்பட்ட காலத்துடன் ஒப்பிடும் போது, தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஓ.4)



## பஹ்ரைன்
# முதலீட்டாளர்களுக்கு இலங்கை அழைப்பு

கொழும்பு,ஜுலை 21
பஹ்ரைன் நாட்டின் முதலீட்டாளர்களுக்கு, இலங்கை அழைப்பு விடுத்துள்ளது.
பஹ்ரைன் இராச்சியத்தின் கைத்தொழில், வர்த்தகம் மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் சயீத் பின் ரஷீத் அல் சயானியுடன், பிராந்திய ஒத்துழைப்புக்கான இராஜாங்க அமைச்சர் தாரக்க பாலசூரிய தொலைபேசி வாயிலாக கலந்துரையாடலில் ஈடுபட்டார்.
இதன்போது, இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தகம் மற்றும் முதலீடு உள்ளிட்ட பொருளாதார உறவுகளை மேம்படுத்துவதற்கான வழிமுறைகளை இருவரும் ஆராய்ந்தனர்.
தெற்காசியாவின் நுழைவாயிலாக விளங்கும் கொழும்புத் துறைமுக நகரத்தில் காணப்படும் முதலீட்டு வாய்ப்புக்களை எடுத்துரைத்த இராஜாங்க அமைச்சர் பாலசூரிய, இந்த விஷேட பொருளாதார வலயத்தின் ஏராளமான வரப்பிரசாதங்களைப் பெற்றுக்கொள்வதற்காக பஹ்ரைன் முதலீட்டாளர்களுக்கும் அழைப்பு விடுத்தார்.
சுற்றுலாத்துறைகளிலான ஒத்துழைப்பு, சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்கள் முக்கிய பங்கு வகிக்கும் ஆக்கபூர்வமான பொருளாதாரம் மற்றும் பல்தரப்பு அரங்கு உட்பட பரஸ்பரம் ஆர்வமுள்ள பல துறைகள் குறித்தும் அமைச்சர்கள் கலந்துரையாடினர்.
இந்தக் கலந்துரையாடலை பஹ்ரைன் இராச்சியத்துக்கான இலங்கைத் தூதுவர் பிரதீபா சரம் ஒழுங்கமைத்திருந்தார். (ஓ.4)

# தடுப்பூசி ஏற்றலில் இலங்கை முன்னிலை

கொழும்பு,ஜுலை 21
**கொரோனாத் தடுப்பூசி ஏற்றும் செயற்றிட்டத்தில் ஈடுபட்டுள்ள நாடுகளில் இலங்கை முன்னிலையில் உள்ளது என்று அவ வேள்ட் இன் டேட்டா என்ற இணையத்தளம் தெரிவித்துள்ளது.**



நாளாந்த தடுப்பூசியேற்றும் நடவடிக்கை துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருவதே இதற்குக் காரணம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
இலங்கையில் இதுவரை 56 லட்சத்துக்கும் மேற்பட்டவர்களுக்கு முதலாவது கொரோனாத் தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளது. 16 லட்சத்துக்கும் மேற்பட்டோருக்கு இரண்டாவது தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளது.
கொழும்பு மாவட்டத்தில் 81 வீதமானோருக்கும், கம்பஹா மாவட்டத்தில் 79 வீதமானோருக்கும், களுத்துறை மாவட்டத்தில் 77 வீதமானோருக்கும் தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளது.
செப்ரெம்பர் மாத நிறைவுப் பகுதிக்குள் 30 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் தடுப்பூசி ஏற்றுவதே இலங்கை அரசின் எதிர்பார்ப்பாகும்.
இதுவரை 100 லட்சத்துக்கும் அதிகமான தடுப்பூசிகள் இலங்கைக்கு எடுத்துவரப்பட்டுள்ளன. மேலும் 20 மில்லியன் தடுப்பூசிகள் எதிர்வரும் சில வாரங்களில் இலங்கைக்குக் கிடைக்கவுள்ளன. அதே வேளை நாட்டில் தடுப்பூசியேற்றும் வேலைத்திட்டத்துக்கு முப்படையினரின் முழுமையான ஆதரவு கிடைக்கப்பெற்றுள்ளது - என்றுள்ளது. (ஓ.4)

# ஏப்.21 தாக்குதலுடன் தொடர்பென 10 பேரின் விவரங்கள் கையளிப்பு

கொழும்பு,ஜுலை 21
இலங்கையில் நடத்தப்பட்ட உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல்களுடன் தொடர்புடையவர்கள் என்று குறிப்பிட்டு, 10 பேரின் விவரங்கள் கர்தினால் மெல்கம் ரஞ்ஜித் ஆண்டகையால், ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவிடம் கையளிக்கப்பட்டுள்ளது.
இந்தத் தகவலை ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.
உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கு நீதிகோரி கொழும்பு பேராயர் கர்தினால் ரஞ்ஜித் ஆண்டகை, ஜனாதிபதிக்கு கடிதமொன்றை அண்மையில் அனுப்பிருந்தார்.
அதில் உயிர்த்த ஞாயிறு தாக்குதலுடன் தொடர்புபட்ட மேலும் பலரது விபரங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஓ.4)




# பெரஹர நடனக்குழுவில் 15 பேருக்கு கொரோனா

கொழும்பு,ஜுலை 21
ருஹுனு மகா கதிர்காம தேவாலயத்தில் இடம்பெற்ற எசல பெரஹரவில் கலந்துகொண்ட நடனக் குழுக்களில் 15 பேருக்கு கொரோனாத் தொற்று இருப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.
நடனக் குழுவினருக்கு மேற்கொள்ளப்பட்ட அன்டிஜென் பரிசோதனையில், தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்.
குறித்த தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்ட பின்னர், ஊர்வலத்தில் இருந்து சவுக்கு மற்றும் தீப்பந்து உள்ளிட்ட 4 நடன குழுக்கள் அகற்றப்பட்டுள்ளன.
பாரம்பரிய பழக்க வழக்கங்களுக்கு முன்னுரிமை அளித்து, பெரஹர இடம்பெற்ற போதிலும், குறைந்த எண்ணிக்கையிலான நடனக் குழுக்களைச் சேர்க்க, சுகாதாரப் பிரிவினர் நடவடிக்கை எடுத்திருந்தனர். (ஓ.4)



# டெல்டா, பீட்டா வைரஸுக்களை சைனோஃபோர்ம் எதிர்க்கும்

கொழும்பு,ஜுலை 21
டெல்டா மற்றும் பீட்டா வைரஸுக்களிலிருந்து, சைனோஃபோர்ம் தடுப்பூசி பூரண பாதுகாப்பு அளிக்கும் என்று சிறி ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் நோயெதிர்ப்பு மற்றும் மூலக்கூற்று மருத்துவப்பிரிவின் பணிப்பாளர் விசேட மருத்துவ நிபுணர் சந்திம ஜீவந்தர தெரிவித்துள்ளார்.
சைனோஃபோர்ம் தடுப்பூசி செலுத்திக்கொண்டவர்களுள் 95 வீதமானவர்களின் உடம்பில் நோய் எதிர்ப்பு சக்தி வளர்ச்சியடைந்துள்ளமை பரிசோதனை ஊடாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.
சிறி ஜயவர்தனபுர பல்கலைகழக மாணவர்களால் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் இந்த விடயம் இனங்காணப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஓ.4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரிஷாத் வீட்டில் நடந்த விவகாரம் எதிர்க்கட்சியினர் ஏன் மௌனம்?

## ஆளுந்தரப்பு சபையில் விளாசல்



**கொழும்பு,ஜூலை 21**

**ஜனநாயகத்தை பற்றிப் பேசும் எதிர்க்கட்சியினர், ரிஷாத் பதியுதீனின் வீட்டில், மலையகத்தைச் சேர்ந்த சிறுமி உயிரிழந்த விடயம் தொடர்பில் மௌனம் சாதிப்பது ஏன் என்று இராஜாங்க அமைச்சர் காஞ்சன விஜேசேகர கேள்வி எழுப்பினார்.**

நாடாளுமன்றத்தில் நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான முதல் நாள் விவாதத்தில் உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ரிஷாத் பதியுதீனின் வீட்டில் சிறுமி ஒருவர் தீயிட்டு உயிரிழந்துள்ளார். இது பற்றி நாடாளுமன்றத்தில் ஒரு வார்த்தைகூட எதிர்க்கட்சியினர் பேசவில்லை. எதிர்க்கட்சிகளின் கட்சித் தலைவர் ஒருவரது வீட்டில் தான் சிறுமி உயிரிழந்துள்ளார்.

சிறுமி உயிரிழந்துள்ளமை மாத்திரமல்லாது, பொலிஸ் விசாரணைகளில் துஷ்பிரயோகத்துக்கும் உட்படுத்தப்பட்டுள்ளார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

முடிந்தால் கட்சித் தலைவர்கள் கூட்டத்தைக் கூட்டி அவரை வெளியேற்றுங்கள். குறைந்தபட்சம் தற்காலிகமாகவேனும் தடை விதியுங்கள்.

கடந்த காலத்தில் அமைச்சர் விமல் வீரவன்சவுக்கு எதிராக பல குற்றச்சாட்டுகளை முன்வைத்திருந்தீர்கள்.

ஆனால், எதிர்க் கட்சிகளாக ஐ.தே.கவும், ஜே.வி.பியும் ஐக்கிய மக்கள் சக்தியும் இந்தச் சிறுமி பற்றி ஒரு வார்த்தையைக் கூடபேசவில்லை. முடிந்தால் இந்த விடயத்தில் முதுகெலும்புடன் செயற்படுங்கள் - என்றார். (ஓ.4)

# தடுப்பூசி திட்டத்துக்கு சீனா பாராட்டு

கொழும்பு,ஜூலை 21

கொரோனாத் தடுப்பூசி செலுத்தும் செயற்றிட்டத்தை இலங்கை மிகவும் விரைவுபடுத்தியுள்ளது என்று சீனத்தூதரகம் பாராட்டுத் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் சீனத்தூதரகம் தனது உத்தியோகபூர்வ ருவிற்றர் பக்கத்தில், எதிர்வரும் 2 தொக்கம் 3 வாரங்களில் மேலும் 5.6 மில்லியன் சைனோஃபோம் தடுப்பூசிகள் இலங்கையை வந்தடையும் என்றும் குறிப்பிட்டுள்ளது. (ஓ.4)



# சிறுமி துர்நடத்தை பிக்கு உள்ளிட்ட நால்வர் மறியலில்

கொழும்பு,ஜூலை 21

13 வயது சிறுமியைக் கடத்திச்சென்று பாலியல் துர்நடத்தைக்கு உட்படுத்தினர் என்ற குற்றச்சாட்டில், பிக்கு உட்பட நால்வர் கைதுசெய்யப்பட்டு, விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

ராஜகிரிய பிரதேச விகாரை ஒன்றின் பிக்கு உள்ளிட்ட நால்வரே கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட நால்வரும் அத்தனகல்ல நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு, விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

வெயாங்கொட பகுதியைச் சேர்ந்த சிறுமிக்கு வரம் தருகின்றோம் என்று அழைத்துச்சென்று துர்நடத்தைக்கு உட்படுத்தினர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ.4)

# 63 வீத ஆசிரியர்களுக்கு கொரோனாத் தடுப்பூசி



கொழும்பு,ஜூலை 21


ஆசிரியர்களில் 63 வீதமானோருக்கு கொரோனாத் தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளது என்று கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எதிர்வரும் ஒகஸ்ட் மாதத்துக்குள் பாடசாலைகளை மீண்டும் திறப்பதற்கு எதிர்பார்த்துள்ளோம்.

அத்துடன் அடுத்த வருடம் தரம் ஒன்றுக்கு மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதற்கான விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் கால எல்லை நீடிக்கப்பட்டுள்ளது.

கொரோனாத் தொற்று நிலைமையைக் கருத்தில் கொண்டு இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது - என்றார். (ஓ.4)





# விலை மதிக்க முடியாத மூன்று இரத்தினக்கற்கள்

## *இலங்கை வங்கியின் பாதுகாப்பில்*

கொழும்பு,ஜூலை 21

விலை மதிக்க முடியாத பெறுமதி வாய்ந்த மூன்று இரத்தினக்கற்கள், இலங்கை வங்கியின் பாதுகாப்பில் தற்காலிகமாக வைக்கப்பட்டுள்ளன என்று இரத்தினக்கற்கள் மற்றும் தங்க ஆபரணங்கள் தொடர்பான கைத்தொழில் இராஜாங்க அமைச்சு தெரிவித்துள்ளது.

கொள்ளுப்பிட்டி பகுதியில் உள்ள தேசிய இரத்தினக்கல் மற்றும் தங்காபரண அதிகார சபை கட்டடம் தாழிறங்கியதால், அதிகார சபையின் நடவடிக்கைகளுக்கு தற்காலிகமாகப் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

இதனையடுத்து இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தவின் ஆலோசனைக்கு அமைவாக, அதிகார சபையின் பணிகள் நாரஹேன்பிட்டி பகுதியில் உள்ள அமைச்சின் கட்டடத்தில் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

தேசிய இரத்தினக்கல் மற்றும் தங்காபரண அதிகார சபையின் பணிகள், மீண்டும் வழமைக்குத் திரும்பும் வரை அதிகார சபையின் வசமிருந்த மூன்று விலைமதிக்க முடியாத இரத்தினக்கற்கள் இலங்கை வங்கியின் பாதுகாப்பு பெட்டியில் வைக்கப்பட்டுள்ளன.

பொலிஸ் விசேட அதிரடிப் படையின் உயர் பாதுகாப்புக்கு மத்தியில், இரத்தினக் கற்கள் இலங்கை வங்கிக்குக் கொண்டுவரப்பட்டு பாதுகாப்பான முறையில் வைக்கப்பட்டுள்ளன. (ஓ.4)

# ரணிலுக்கு தகுதியில்லை சரத் வீரசேகர சாட்டை



கொழும்பு,ஜூலை 21

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும், முன்னாள் பிரதமருமான ரணில் விக்கிரமசிங்க, பிரதமராக இருந்த போது பல சந்தர்ப்பங்களில் அரசமைப்பை முழுமையாக மீறியே செயற்பட்டார்.

அதனால் நாடாளுமன்ற உறுப்பினர்களின் சிறப்புரிமைகள் பற்றி பேசுவதற்கு அவருக்கு எவ்வித தார்மீக உரிமையும் கிடையாது என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்தார்.

நாடாளுமன்றில் பங்கரவாதத் தடுப்புச் சட்டம் தொடர்பில், ரணில் விக்கிரமசிங்க முன்வைத்த விசேட கூற்றுக்குப் பதிலளிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ரணில் விக்கிரமசிங்க பிரதமராகவிருந்த காலப்பகுதியில் ஊழல் ஒழிப்புப் பிரிவை உருவாக்கிய சந்தர்ப்பத்தில் அரசமைப்பை மீறியிருந்தார்.

ஆகவே, நாடாளுமன்ற உறுப்பினர்களின் சிறப்புரிமை பற்றி பேசுவதற்கு ரணில் விக்கிரமசிங்கவுக்கு எவ்வித தார்மீக உரிமையும் இல்லை.

ரிஷாத் பதியுதீன் உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களுடன் பல்வேறு தொடர்புகளைக் கொண்டிருந்த குற்றச்சாட்டுகளின் பிரகாரமே கைதுசெய்யப்பட்டிருந்தார்.

அவரது விவகாரம் தற்போது சட்டமா அதிபரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. ஹரின் பெர்னாண்டோவைக் கைதுசெய்வதற்கு எவ்வித தயார்படுத்தல்களும் இருக்கவில்லை.

ஆனால், உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களின் பிரதான சூத்திரதாரியைத் தெரியும் என்று அவர் கூறியிருந்தார்.

பிரதான சூத்திரதாரி யார் என்று தெரியுமாக இருந்தால் தேசிய பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு அவர் தகவல்களை வழங்குவது கடமையாகும் - என்றார். (ஓ.4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொரோனாத் தொற்றுக் காலத்தில் அர்ப்பணிப்பான சேவையாளர்கள்

## கௌரவிக்கத் திட்டம்

**கொழும்பு, ஜூலை 21**

**கொரோனாத் தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக, அர்ப்பணிப்புடன் சேவையாற்றிய நேர்மையான அரச ஊழியர்கள் கௌரவிக்கப்படவுள்ளனர். ட்ரான்ஸ் பேரன்ஸி இன்டர்நெஷனல் அமைப்பால், வருடாந்தம் நடத்தப்படும் 'இன்டகிரிட்டி ஐக்கொன்' விருது வழங்கல் செயற்றிட்டத்தின் ஊடாக, இந்த வருடம் இந்தக் கௌரவிப்பு இடம்பெறவுள்ளது.**

இது தொடர்பில் இன்டர்நெஷனல் அமைப்பால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கொரோனாத் தொற்றுப் பரவலானது உலக நாடுகளின் சுகாதாரத்துறைசார் இயலுமையைப் பரீட்சிக்கும் வகையில் அமைந்துள்ளது.

இந்தத் தொற்றுநோயைக் கட்டுப்படுத்தும் நோக்கில் உலகெங்கிலும் பெருமளவான அரச ஊழியர்கள் அர்ப்பணிப்புடன் சேவையாற்றி வருகின்றனர்.

இந்தத் தொற்றுநோய்க்கு எதிரான அவர்களது நேர்மையானதும் அர்ப்பணிப்பானதுமான செயற்பாட்டை அங்கீகரித்து, அவர்களைக் கௌரவப்படுத்த வேண்டிய கடப்பாடு நாட்டு மக்களாகிய எமக்கு உள்ளது.

எனவே ட்ரான்ஸ்பேரன்ஸி இன்டர்நெஷனல் அமைப்பால் வருடாந்தம் நடத்தப்படும் 'இன்டகிரிட்டி ஐக்கொன்' விருது வழங்கல் செயற்றிட்டத்தின் ஊடாக, அர்ப்பணிப்புடன் சேவையாற்றிய நேர்மையான அரச ஊழியர்களைக் கௌரவிப்பதற்குத் திட்டமிட்டுள்ளோம்.

அவ்வாறான ஊழியர்களின் பெயர்களைப் பரிந்துரைசெய்யுமாறு பொதுமக்களிடம் கேட்டுக்கொள்கின்றோம்.

கொரோனாத் தொற்றைத் தடுப்பதற்காக செயலாற்றும் சாதனையாளர்கள் எனும் தொனிப்பொருளின் கீழ், தொற்றுநோய்ப் பரவலைக் கட்டுப்படுத்த தமது கடமைகளுக்கு அப்பால் அர்ப்பணிப்புடனும், நேர்மையுடனும் பணியாற்றும் அரச ஊழியர்களைக் கௌரவிக்க இம்முறை 'இன்டர்கிரிட்டி ஐக்கன் 2021' முயற்சிக்கின்றது.

இந்த விருதுக்குப் பொருத்தமானவர் என்பது பொதுமக்களின் பரிந்துரைகள் மூலம் தெரிவுசெய்யும் ஓர் தனித்துவமான விருது வழங்கல் செயற்றிட்டமாகும்.

இதற்கு அரச சேவையில் ஐந்து வருடங்களுக்கு மேற்பட்ட சேவைக்காலம் மற்றும் ஓய்வுபெற இன்னும் ஐந்து வருட கால இடைவெளியும் கொண்ட அரச ஊழியர்கள் விண்ணப்பிக்கலாம். அல்லது அவர்களை மக்கள் பரிந்துரைக்கலாம். பரிந்துரைகளை பொதுமக்கள் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 6 ஆம் திகதிவரை சமர்ப்பிக்கலாம்- என்றுள்ளது. (ஓ.4)



# இடுகம நிதியத்துக்கு டராஸ் நிறுவனம் உதவி

கொழும்பு,ஜூலை 21

இடுகம கொவிட்- 19 சுகாதார மற்றும் சமூக பாதுகாப்பு நிதியத்தைக் கட்டியெழுப்பும் நோக்கில், இலங்கை டராஸ் நிறுவனத்தால், 2 மில்லியன் ரூபாவுக்கான காசோலை, பிரதமர் மஹிந்த ராஜபக்சவிடம் கையளிக்கப்பட்டது.

அத்துடன் கொவிட் நோயாளர்களுக்கு சிகிச்சை அளிப்பதற்குத் தேவையான பி.பி..ஈ. (PPE) கருவிகளும் கையளிக்கப்பட்டன.

நிகழ்வில் இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ச, மாகாண சபைகள் உள்ளூராட்சி அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் ரொஷான் ரணசிங்க மற்றும் இலங்கை டராஸ் நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் ரகில் பெர்னாண்டோ, தலைமை செயற்பாட்டு முகாமையாளர் தர்ஷிகா அத்தநாயக்க, தலைமை நிர்வாக அதிகாரி மலித் ரணதேவ ஆகியோர் கலந்து கொண்டனர். (ஓ.4)



# மின்சார சபைக்கும் விரைவில் நெருக்கடி

## சம்பிக்க எதிர்வு கூறல்

கொழும்பு,ஜூலை 21

நாட்டில் ஏற்பட்டுள்ள பல்வேறு நெருக்கடிக்குள், அடுத்த சில மாதங்களில் மின்சார சபையும் தள்ளப்படும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

நாடாளுமன்றில் அமைச்சர் உதய கம்மன்பிலவுக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை மீதான முதல் நாள் விவாதத்தில் உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடன் நெருக்கடி, பொருளாதார வீழ்ச்சி, பெற்றோலியக் கூட்டுத்தாபன வீழ்ச்சி என சகல நெருக்கடிகளும் ஒன்றாக சேர்ந்து அரசை நெருக்கடிக்குள் தள்ளியுள்ளன.

நாட்டின் பொருளாதாரமும் அதனுடன் தொடர்புபட்ட எரிபொருள் நெருக்கடி மற்றும் இவற்றுக்குக் காரணமான அரசியல் நெருக்கடி நிலைமைக்கு நாம் முகங்கொடுத்து வருகின்றோம்.

இன்றுள்ள கடன்களைக் கையாள நாட்டின் வெளிநாட்டுக் கையிருப்பு எம்மிடம் இல்லை. கடன்களைப் பெற்றுக் கொள்ள அரச வங்கிகளுக்கு பிணை வைக்கவும் முடியாது. இந்த நெருக்கடிக்குள் எரிபொருள், மருந்து, உரம், அத்தியாவசியப் பொருள்களை எவ்வாறு இறக்குமதி செய்வது என்ற பெரும் பிரச்சினை ஏற்பட்டுள்ளது- என்றார். (ஓ.4)

# புதிய எரிவாயு சிலிண்டர் 1,150 ரூபாவுக்கு நிர்ணயம்

கொழும்பு.ஜூலை 21

எரிவாயு நிறுவனங்கள் அறிமுகப்படுத்திய புதிய 18 லீற்றர் எரிவாயு சிலிண்டரின் விலையை ஆயிரத்து 150 ரூபாவுக்கு விற்பனைசெய்ய அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்த்தன முன்வைத்த திட்டத்துக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. இந்த புதிய எரிவாயு சிலிண்டர் ஆயிரத்து 395 ரூபாவுக்கு சந்தையில் அறிமுகப்படுத்தப்பட்டது.

எனினும் 12.5 கிலோ உள்நாட்டு எரிவாயு சிலிண்டரின் விலை ஆயிரத்து 495 ரூபாவாக இருக்கும்போது, 18 லிற்றர் எரிவாயு சிலிண்டரை ஆயிரத்து 395 ரூபாவுக்கு விற்பனைசெய்வது நியாயமற்றது என்று வர்த்தக அமைச்சர் சுட்டிக்காட்டியிருந்தார். இதற்கிடையில், புதிய எரிவாயு சிலிண்டரில் உள்ள வாயுவின் அளவை கிலோ கிராமில் பதிவுசெய்யவும் அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. (ஓ.4)

# உயிர்த்த ஞாயிறு தாக்குதல் விவகாரத்தில் பின்னடிப்பு

## சந்தேகம் வெளியிட்டது ஐ.ம.சக்தி



கொழும்பு,ஜூலை 21

இலங்கையில் இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு தினப் பயங்கரவாதத் தாக்குதல்கள் தொடர்பாக, ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு, சுமார் 6 மாதங்கள் கடந்துள்ளன. எனினும் தாக்குதல்களின் பிரதான சூத்திரதாரிகள் மற்றும் அதற்கு ஆதரவு வழங்கியவர்கள் தொடர்பில் அரசு எவ்வித நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை.

இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க சுட்டிக்காட்டியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தேர்தலின்போது வழங்கிய வாக்குறுதிகளுக்கு அமைவாக, அறிக்கையில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள சூத்திரதாரிகளுக்கு எதிராக உடனடியாக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு நடவடிக்கை எடுப்பதைத் தாமதப்படுத்துவதன் ஊடாக இந்த விவகாரத்தை முழுமையாகப் புறந்தள்ளுவதற்கு அரசு முயற்சிப்பதாக இருந்தால், அதனைப் பகிரங்கமாக அறிவிக்க வேண்டும்.


இல்லாவிட்டால் சூத்திரதாரிகளுக்கு எதிராக உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். என்றார். (ஓ.4)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மீன் பிடிப்பதற்காக குளத்து நீர் திறப்பு; விவசாயிகள், பண்ணையாளர் பாதிப்பு

**முல்லைத்தீவு, ஜூலை 21**
**முல்லைத்தீவு முள்ளியவளை கமநல சேவை நிலையத்தின் கீழ் உள்ள காஞ்சிரமோட்டைக் குளத்தில் தேக்கி வைக்கப்பட்டுள்ள நீர் மீன்பிடிப்பதற்காக திறந்து விடப்பட்டுள்ளதால், நீர் வீண்விரயமாகின்றது என்று விவசாயிகள் மற்றும், கால்நடை வளர்ப்போர் கவலை தெரிவித்தனர்.**

குளத்தின் கீழ் சிறுபோக நெற்செய்கை மேற்கொண்ட விவசாயிகள் அறுவடையை முடித்துள்ள நிலையில், கால்நடைப் பண்ணையாளர்கள் தங்கள் கால்நடைகளை வயல் வெளிகளில் மேய்த்து வருகின்றனர்.



குளத்தில் உள்ள நீரை நம்பியே கால்நடைகள் மேய்ச்சலில் ஈடுபடும் நிலையில், கமநல சேவைகள் திணைக்களத்தால் குளம் மீன் பிடிப்பவர்களுக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளது. இந் நிலையில் மீன் பிடிப்பவர்கள் குளத்தின் கொட்டைத் திறந்து தண்ணீரை கழிவில் விடுவதால் சேமிக்கப்பட்ட நீர் வீண்விரயமாக்கப்படுகின்றது.

குளத்து நீர் வற்றிச்செல்லும் அபாயம் காணப்படுகின்றது. இதனால் கால்நடைகளுக்கு நீர் இல்லாத நிலை ஏற்படும். பல ஆயிரம் கால்நடைகள் குறித்த பகுதியில் மேச்சலுக்காகச் செல்கின்றன.

ஆனால் மீள்குடியேறி 10 ஆண்டுகள் கடந்துவிட்ட நிலையில் களிக்காடு, கோடாலிக்கல்லு, காஞ்சிரமோட்டை ஆகிய பகுதிகளில் உள்ள கால்நடைகளுக்காக இதுவரை அரசால் மேய்ச்சல் தரவை பெற்றுக்கொடுக்கப்படவில்லை.

பல தடவைகள் அரச அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்தும் கால்நடைகளுக்கான மேய்ச்சல் தரவை இல்லாத நிலையில் நாம் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றோம்.

விவசாய குளத்தில் மீன் பிடிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டாலும் குளத்தின் நீர் வீண்விரயமாகக்கூடாது என்பது விவசாயத் திணைக்களங்க ளின் நடைமுறை. இதனையும் மீறியே நீர் திறந்து விடப்படுகின்றது என்று விவசாயிகள் தெரிவித்துள்ளார்கள். (ப-19)

# மக்கள் கேட்டால் குடிதண்ணீர் வழங்குவோம்

*பிரதேச சபைத் தவிசாளர் பதில்*

முல்லைத்தீவு, ஜூலை 21
முல்லைத்தீவு கேப்பாப்பிலவு கிராமத்தில் குடிதண்ணீர் நெருக்கடி ஏற்பட்டுள்ளது என்று கேப்பாப்பிலவு மக்கள் சுட்டிக்காட்டினர்


கேப்பாப்பிலவு, சூரிபுரம், பிலக்குடியிருப்பு ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 300க்கும் மேற்பட்ட குடும்பங்கள் குடிதண்ணீர் நெருக்கடியை எதிர்கொண்டுள்ளன. இக்கிராமத்தில் இருந்து மக்கள் இடம்பெயர்ந்த போது பல கிணறுகள் மூடப்பட்டுள்ளன.

தற்போதுள்ள கிணறுகளில் வறட்சி காரணமாக தண்ணீர் வற்றிக் காணப்படுவதால் குடிதண்ணீர் நெருக்கடி ஏற்பட்டுள்ளது எனவே இது தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்கள் மேலும் தெரிவித்தனர். இது தொடர்பாக கரைதுறைப்பற்று பிரதேச சபையின் தவிசாளர் க.விஜிந்தனிடம் கேட்டபோது; கேப்பாப்பிலவில் குடிதண்ணீர் நெருக்கடி என மக்கள் எவரும் பிரதேச சபையிடம் முறையிடவில்லை. குடிதண்ணீர் நெருக்கடி என்றால் அதை வழங்குவதற்கு எந்நேரமும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. குடிதண்ணீர் நெருக்கடி காணப்படுகின்ற இடங்களில் வாழ்கின்ற மக்கள் தண்ணீருக்கு நெருக்கடி ஏற்பட்டால் உடன் கரைதுறைப்பற்று பிரதேச சபையிடம் அறிவியுங்கள்-என்றார் (ப-13)

# வீதி விளக்குகள் பொருத்தல்

கொடிகாமம்,ஜூலை 21
கொடிகாமம் மற்றும் மிருசுவில் வடக்கு ஆகிய பிரிவுகளில் உள்ள வீதிகளுக்கு அண்மையில் வீதி விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன.

சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர்களுக்கு ஒதுக்கப்பட்ட சபை நிதி ஒதுக்கீட்டில் உறுப்பினர் வை.ஜெகதாஸ்து 2 லட்சம் ரூபா செலவில் குறித்த மின் விளக்குகளை பொருத்தியுள்ளார். (ஐ-9)





# பற்றைகள் நிரம்பிய வீதியை சீரமைத்துத் தருமாறு கோரிக்கை

முல்லைத்தீவு,ஜூலை 21
முல்லைத்தீவு திருமுறிகண்டியில் இருந்து அக்கராயன் செல்லும் வீதியின் இருபுறமும் உள்ள பற்றைகளைத் துப்புரவுசெய்து தருமாறு பொது அமைப்புக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பில் திருமுறிக்ண்டி, அமதிபுரம் மற்றும் அக்கராயன் பகுதிகளைச் சேர்ந்த பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் மேலும் தெரிவிக்கையில்,

வீதியின் இருபுறமும் பற்றைகள் வளர்ந்து இருப்பதன் காரணமாக மாலை 5 மணிக்குப் பின்னர் குறித்த வீதியால் பயணிக்க முடியாமல் பயணிகள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இருபுறமும் பற்றைகள் காணப்படுவதால் காட்டு யானைகள் அவற்றுள் மறைந்திருந்து வீதியால் பயணிப்போரை அச்சுறுத்திவரும் சம்பவங்களும் அண்மைக்காலமாக இடம்பெற்றுவருகிறது.

வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு சொந்தமான குறித்த வீதியின் பற்றைகளை அகற்றுமாறு பலதடவைகள் சபையிடம் முறையிடப்பட்டபோதும் இதுவரை எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

எனவே பொதுமக்களின் நலன் கருதி வீதியின் இருபுறமும் காணப்படும் பற்றைகளை அகற்ற சம்மந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கின்றோம் -என்றனர். (ஐ-13)

# வெடிபொருள்கள் அகற்றப்பட்டுள்ள எமது காணிகளை பார்வையிட அனுமதிக்குக

## முகமாலை மடத்தடி மக்கள் கோரிக்கை

பளை, ஜூலை 21
வெடிபொருள்கள், அகற்றப்பட்ட பகுதியில் உள்ள தமது காணிகளைப் பார்வையிட அனுமதிக்குமாறு அங்கு வசித்து, இடம்பெயர்ந்துள்ள பளை பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட முகமாலை மடத்தடி பகுதி மக்கள் கேட்டுள்ளனர்.

கடந்த 2000 ஆம் ஆண்டு எமது இருப்பிடங்களை விட்டு வெளியேறி 20 வருடங்கள் கடந்துள்ள நிலையில் வெளிப் பிரதேசங்களில் வசித்து வருகின்றோம். இப்பகுதியில் சார் நிறுவனத்தினர் வெடிபொருள்களை அகற்றி வருகின்றனர். வெடி பொருள்கள் அகற்றப்பட்டபோதிலும் மக்கள் மீளக்குடியமர அனுமதிக்கப்படவில்லை. இந்தக் காணிகளில் காணப்பட்ட பனை உள்ளிட்ட பயன்தரு மரங்கள் தறித்து வாகனங்களில் ஏற்றிச் செல்லப்படுகின்றன. அத்துடன் எமது காணிகளிலிருந்து பெருமளவு மணல் வாகனங்களில் ஏற்றிச்செல்லப்படுகின்றது. எனவே எமது காணிகளில் நாம் மீளக்குடியமர அனுமதிக்க முன்னர், கிராம அலுவலருடன் காணிகளுககுச் சென்று பார்வையிடுவதற்கு அனுமதியளிக்கவேண்டும் -என்றனர். (ப-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org













## நகைச்சுவை வசனங்களால் இணையத்தை கலக்கும் 7 வயது சிறுவன்

தற்போது சமூகவலைதளங்களில் 'டிரண்ட்' ஆகவும், பேசு பொருளாகவும் ஆகியுள்ளான் கோவையைச் சேர்ந்த 7 வயதுச் சிறுவன்.

இந்த சிறுவன் பெயர் ரித்விக். ' ரித்து ராக்ஸ்' என்ற பெயரில் இந்த குட்டிப் பையனுக்கு ஒரு யூடியூப் சனலும் இருக்கிறது.

இதுவரை 8 காணொலிகளைப் போட்டுள்ள நிலையில் இந்த சேனலில் 'சப்ஸ்கிரைபர்கள்' எண்ணிக்கை 1 லட்சத்தை நெருங்கப்போகிறது.

"7 வயசில் இப்படி ஒரு திறமையா" என்று ஆச்சரியப்படும் அளவுக்கு இருக்கிறது ரித்விக் நடிப்பு. சும்மா நடித்தால் கூட பரவாயில்லை. பல பாத்திரங்களில் வந்து கலக்குகிறார். வயதான தோற்றமும் பொருந்துகிறது. அதைவிட பெண் குழந்தை வேடமும் பொருந்துகிறது இந்த சிறுவனுக்கு. குறும்பு, யதார்த்தம், அழகான தமிழ் உச்சரிப்பு என இந்த ஒவ்வொரு காணொலியிலும் கலவை கட்டி கலக்கி வருகிறான் இந்தச் சிறுவன்.



## twitter

@Mani Pmp

தூங்கி எழுந்தவுடன் நடுவுல கொஞ்சம் ஞாயிறைக் காணோம்.

@Mani Pmp

சுகர் இருப்பவர்களுக்கு வந்த காயம்கூட ஆறிடும். ஆனா இந்த கவிதை எழுதுவோர்க்கு ஏற்படும் காயம் மட்டும் ஆறவே ஆறாது போல

@Aakashkannan96

சமைக்கும் பெண்ணின் மகிழ்ச்சியும், துக்கமும் உணவின் ருசியில் வெளிப்படுகிறது..!

@nagapattinathan

நண்பர்களிடம் இருக்கும் சகிப்புத்தன்மை நம் வீட்டிலும் இருக்க வேண்டும்.

வெற்றி என்பது பெற்றுக்கொள்வதற்கு
தோல்வி என்பது கற்றுக்கொள்வதற்கு

- வைரமுத்து

## இன்றைய நாள்

**மேடம்:** உறவினருடன் கருத்துவேறுபாடு ஏற்பட்டு மறையும். குடும்பத்தில் மகிழ்ச்சியும், ஒற்றுமையும் நிலவும். செலவு கூடும். வீடு,மனை வாங்கக்கூடிய யோகம் உண்டு. உடல்நிலை சீராகும்.

**இடபம்:** பொருளாதார முன்னேற்றம் இருக்கும். முயற்சி வெற்றி பெறும். நினைத்த விஷயம் கைகூடி மகிழ்ச்சி அளிக்கும். ஆடம்பர எண்ணம் வரும். பொன் பொருள் சேரும்.

**மிதுனம்:** வழக்கின் தீர்ப்பு சாதகமான திசையில் செல்லும். பொறுமை தேவை. கடன் பிரச்சினை குறையும். நவீன உத்திமூலம் நன்மை காண்பீர்கள். பதவி, ஊதிய உயர்வு கிடைத்து மகிழ்ச்சி அடைவீர்கள்.

**கடகம்:** கொடுக்கல், வாங்கலில் அனுகூலமானப் பலன் உண்டாகும். வாக்குறுதியைக் காப்பாற்றுவீர்கள். பெரிய மனிதரின் உதவி கிடைக்கும். முதலீட்டை அதிகப்படுத்தி லாபம் அடைவீர்கள்.

**சிம்மம்:** பணியைச் சிறப்பாக முடித்து அதிகாரியின் பாராட்டுப் பெறுவீர்கள். வெளியூர் சென்று பணிபுரிய விரும்புபவர்களின் விருப்பம் நிறைவேறும். வேலை தேடுபவர்கள் வேலை பெறுவர்.

**கன்னி:** சக ஊழியர் ஒத்துழைப்பால் வேலைப்பளு குறையும். தடைப்பட்ட நல்ல விஷயம் நிறைவேறத் துவங்கும். புத்திர பாக்கியம் அமையும். குழந்தைகள் மகிழ்விப்பார்கள்.

**துலாம்:** மகிழ்ச்சி தரக்கூடிய சம்பவம் நடக்கும். ஆன்மிக சிந்தனை அதிகரிக்கும். பொருளாதார நிலை முன்பைவிட பன்மடங்கு உயரும். சேமிக்கலாம். எதிர்பாராத சந்தோஷம் உண்டாகும்.

**விருச்சிகம்:** ஆரோக்கியம் சிறப்பாக அமையும். வீடு வாங்கும் யோகம் உண்டாகும். பணி புரியும் பெண்களுக்கு உயர்பதவி கிடைக்கும். அந்தஸ்து உயரும்.

**தனுசு:** நல்ல குணத்தால் பணத்திறகு சிரமப்பட்டாலும் முடிவு நன்மையே. மறைமுக வருமானம் பெருகும். பெற்றோரின் தேவையை நிறைவேற்றுவீர்கள். முயற்சி வெற்றி பெறும்.

**மகரம்:** உங்கள் பேச்சால் சிலருக்கு நன்மை உண்டாகலாம். செல்வாக்கு ஏற்படும். தேவைக்கேற்ப வருமானம் சிறப்பாக இருக்கும்.. உடனிருப்பவர்களின் மூலம் சாதமான பலன் உண்டாகும்.

**கும்பம்:** குடும்பத்தில் சுப நிகழ்ச்சி கைகூடி மகிழ்ச்சியளிக்கும். சொத்துக்களால் பராமரிப்புச் செலவு உண்டாகும். மகிழ்ச்சி உண்டு. சொத்து வாங்கும் வாய்ப்பு கிடைத்தால் யோசித்து முடிவெடுங்கள்.

**மீனம்:** புதிய வாய்ப்பு தேடி வரும். தடைப்பட்ட பணவரவு வந்து சேரும். பொருளாதார நிலை உயரும். வெளியூர் செல்ல வாய்ப்பு வரும். வளர்ச்சிக்கான வாய்ப்பு கிடைக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நேருக்கு நேர் மோதிய பஸ்கள்

- 7 பேர் உயிரிழப்பு
- 8 பேர் காயம்

புதுடில்லி, ஜூலை 21

உத்தரப் பிரதேசத்தின் பஹ்ரஜோய் பொலிஸ் நிலைய எல்லைக்குட்பட்ட ஆக்ராசண்டவுசி நெடுஞ்சாலையில் இரு பஸ்கள் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள் ளாகியுள்ளன. இந்த விபத்தில் 7 பேர் உயிரிழந்துள்ளதுடன், 8 பேர் காயமடைந்துள்ளனர் என்று இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

லஹரவன் கிராமம் அருகே ஞாயிற்றுக்கிழமை இரவு இந்த விபத்து நிகழ்ந்துள்ளது. திருமண நிகழ்வொன்றுக்காக சந்தவுனியில் இருந்து சாப்ரா செல்லும் பஸ் பழுதடைந்ததை அடுத்து வீதியோரம் நிறுத்தப்பட்டிருந்தபோது, வேகமாக வந்த பிறிதொரு பஸ் அந்த பஸ்ஸூடன் மோதுண்டே இந்த விபத்து நடந்துள்ளது.

இந்தச் சம்பவத்தில் 7 பேர் உயிரிழந்ததுடன், 8 பேர் காயமடைந்துள்ளனர். அதே வேளை, விபத்தை ஏற்படுத்திய பஸ்ஸின் சாரதியும், நடத்துநரும் சம்பவ இடத்திலிருந்து தப்பிச் சென்றுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். (எ-இ)

# இந்தியாவில் தணிகின்றது கொவிட் வைரஸ் தாக்கம்!

சென்னை, ஜூலை 21

கொரோனா தொற்றின் இரண்டாவது அலையால் இந்தியாவில் பாதிப்புகள் உச்சமடைந்திருந்த நிலையில், தற்போது கொரோனா பாதிப்பு ஓரளவு குறையத் தொடங்கியுள்ளது.

நேற்று இந்தியாவில் கொரோனா பாதிப்பு சற்று குறைந்துள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது. இது தொடர்பாக மத்திய சுகாதாரத்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது

இந்தியாவில் கடந்த 24 மணித்தியாலத்தில் 38 ஆயிரத்து 164 பேர் கொரோனா தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர். நாட்டின் மொத்த கொரோனா பாதிப்பு எண்ணிக்கை 3 கோடியே 11 இலட்சத்து 44 ஆயிரத்து 229 ஆக உயர்வடைந்துள்ளது.

நேற்றுமுன்தினம் 499 பேர் உயிரிழந்துள்ளனர்.

மொத்த உயிரிழப்பு எண்ணிக்கை 4 லட்சத்து 14 ஆயிரத்து 108 ஆக உயர்வடைந்துள்ளதுடன் கடந்த 24 மணிநேரத்தில் 38 ஆயிரத்து 660 பேர் குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)



# எழுவரின் விடுதலையை வலியுறுத்திய ஸ்டாலின்!

சென்னை, ஜூலை 21

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் கொலை வழக்கில் தண்டனை அனுபவித்து வரும் ஏழு பேரின் விடுதலை தொடர்பாக வலியுறுத்தப்பட்டுள்ளது என்று தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார். ஜனாதிபதி ராம்நாத் கோவிந்தை நேற்றுத் திங்கட்கிழமை சந்தித்து பேசிய பின்னர் செய்தியாளர்களிடம் கருத்து தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

சட்டப் பேரவையின் நூற்றாண்டு விழாவுக்குத் தலைமை தாங்க குடியரசு தலைவருக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

அதேநேரம் ஏழு பேரின் விடுதலை விவகாரத்தில் சட்ட ரீதியான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளேன். என்றார். (எ-இ)

# சுவர் இடிந்து வீழ்ந்து 24 பேர் உயிரிழப்பு!

புதுடில்லி, ஜூலை 21

மும்பையின் செம்பூர் மற்றும் விக்ரோலி பகுதிகளில் சுவர் இடிந்து வீழ்ந்த இரு வெவ்வேறு சம்பவங்களில் உயிரிழந்தவர்களின் தொகை 24 ஆக உயர்ந்துள்ளது. செம்பூரில் 15 பேரும், விக்ரோலியில் ஒன்பது பேரும் உயிரிழந்துள்ளனர் என்று இந்தியா டுடே செய்தி வெளியிட்டுள்ளது.

சம்பவத்துக்கு பிரதமர் நரேந்திர மோடி இரங்கல் தெரிவித்துள்ளதுடன், இறந்தவர்களின் உறவினர்களுக்கு 2 இலட்சம் ரூபாவும், காயமடைந்தவர்களுக்கு 50 ஆயிரம் ரூபாவும் வழங்க வேண்டும் என்று உத்தரவிட்டுள்ளார்.

மகாராஷ்டிராவின் மும்பையில் தொடர்ந்து பெய்த மழையை அடுத்து, நகரின் பல பகுதிகள் நீரில் மூழ்கியுள்ளன. நிலச்சரிவு காரணமாக சுவர் இடிந்து விழுந்துள்ளது என்று இந்திய பேரிடர் மேலாண்மை ஆணையகம் தெரிவித்துள்ளது. (எ-இ)

# சீனாவில் 'குரங்கு பி'



பீஜிங், ஜூலை 21

கொரோனாவை தொடர்ந்து சீனாவில் 'குரங்கு பி' வைரஸ் தாக்கி ஒருவர் உயிரிழந்துள்ளார். 53 வயதான கால்நடை வைத்தியர் ஒருவர் இரண்டு குரங்குகளுக்கு உடற்கூறாய்வு செய்திருக்கிறார். சில மாதங்களுக்கு பின் குமட்டல், வாந்தி, காய்ச்சல், நரம்பு பாதிப்பால் அவதிப்பட்டுள்ளார்.

வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட அவர் கடந்த மே 27 ஆம் திகதி உயிரிழந்துள்ளார். அவரது எச்சில் மற்றும், இரத்த மாதிரிகளை ஆய்வு செய்ததில் 'குரங்கு பி' வைரஸ் தொற்று இருந்தது கண்டறியப்பட்டது. 'குரங்கு பி' வைரஸ் தாக்கி ஒருவர் முதல் முறையாக உயிரிழந்துள்ளமை சீனாவில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இந்த வைரஸ் மகாக்ஸ் வகை குரங்குகளில் 1932ஆம் ஆண்டு கண்டறியப்பட்டது.

இதில் இறப்பு சதவீதம் (70-80) அதிகம். குரங்கு, மிருகங்களுக்கு சிகிச்சை அளிப்பவர்கள், ஆய்வு மைய பணியாளர்கள் கூடுதல் பாதுகாப்புடன் இருக்கும்படி சீனாவின் நோய் கட்டுப்பாடு தடுப்பு மையம் அறிவுறுத்தியுள்ளது. மனிதர்களை 'குரங்கு பி' வைரஸ் தாக்கும் போது 13 வாரங்களில் அறிகுறிகள் தென்படும். பின் மத்திய நரம்பு மண்டலத்தை தாக்கி மரணத்தை ஏற்படுத்தும் என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ-இ)



# ரஷ்யா, அமெரிக்காவில் பற்றி எரியும் காடுகள்!

நியூயோர்க், ஜூலை 21

ரஷ்யாவின் வனப்பகுதியில் 8 இலட்சம் ஹெக்டயர் பரப்பளவில் பற்றி எரியும் காட்டுத் தீயை அணைக்க அந்த நாட்டு தீயணைப்பு வீரர்கள் போராடி வருகின்றனர். சைபீரிய வனப்பகுதியில் கடந்த சில வாரங்களாக காட்டுத் தீ பற்றி எரிந்து வருகிறது.

நேற்றுமுன்தினம் ஒரே நாளில் 4 ஆயிரத்து 500 ஹெக்டேயர் பரப்பளவில் 22 புதிய இடங்களில் நெருப்பு பற்றி எரிகிறது. அதனால் ஏற்பட்டுள்ள புகை மண்டலம் அந்தப் பகுதி முழுவதும் சூழ்ந்துள்ளது.

வனப்பகுதியை ஒட்டியுள்ள கோர்னி என்ற பகுதியை புகை சூழ்ந்துள்ளதால் அங்கு வாழும் மக்கள் பெரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர். தொடர்ந்து எரியும் நெருப்பை அணைக்கும் பணியில் தீயணைப்பு வீரர்களுடன், இராணுவத்தினரும் களமிறக்கப்பட்டுள்ளனர்.

நெருப்பு தொடர்ந்து எரிவதால் மக்கள் வீடுகளுக்குள்ளேயே இருக்கும்படி அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

## அமெரிக்கா

அமெரிக்காவில் ஓரேகான் மாநிலத்தில் 3 லட்சம் ஹெக்ரேயர் பரப்பளவில் பற்றி எரியும் காட்டுத் தீயால் ஆயிரக்கணக்கானோர் வெளியேறியுள்ளார்கள்.

ஓரிகான் மாநிலத்தில் வரலாற்றில் மிகப் பெரிய அழிவுகரமான பூட்லெக் தீயை கட்டுக்குள் கொண்டு வர 2,000 க்கும் மேற்பட்ட தீயணைப்பு வீரர்கள் ஈடுபட்டுள்ளனர்.

கடந்த 6 ஆம் திகதி ஆரம்பித்த காட்டுத்தீயினால் லொஸ் ஏஞ்சல்ஸ் நகரத்தை விடப் பெரிய பகுதி எரிந்து நாசமாகியுள்ளது.

13 அமெரிக்க மாநிலங்களில் பரவும் 80 க்கும் மேற்பட்ட பெரிய தீக்களில் இதுவும் ஒன்றாகும்.

இது வெப்ப அலைகள் மற்றும் அதிக காற்று ஆகியவற்றால் தூண்டப்படுகிறது.

காட்டுத் தீ காரணமாக 2 ஆயிரம் குடியிருப்பாளர்கள் வீடுகளை விட்டு வெளியேறியுள்ளனர். [illegible] வீடுகள் மற்றும் கட்டிடங்கள் இதுவரை எரிந்து நாசமாகியுள்ளது.

கிளமத் நீர்வீழ்ச்சி மற்றும் ரெட்மண்ட் உட்பட பல நகரங்களில் வசிப்பவர்களுக்காக இரண்டு தற்காலிக முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன. (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை மாணவர்கள் கற்றலில் மிக ஆர்வம்

## ஐ.நா. சபை பாராட்டு

கொழும்பு,ஜூலை 21

இலங்கை மாணவர்கள் தற்போதைய நெருக்கடியான சூழலிலும் கல்வியைப் பெற்றுக்கொள்வதில், அவர்கள் காண்பிக்கும் ஆர்வம் மிகுந்த ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது என்று ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி ஹனா சிங்கர் பாராட்டுத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தனது உத்தியோகபூர்வ ருவிற்றர் பக்கத்தில், இலங்கை மாணவர்கள் அனைவருக்கும் பாதுகாப்பான வகுப்பறையொன்றை அணுகுவதற்கான வாய்ப்பை ஏற்படுத்திக்கொடுப்பது அவசியமாகும் என்றும் குறிப்பிட்டுள்ளார். இலங்கையில் தெளிவான வலைப்பின்னல் வசதிகளற்றும், பின்தங்கிய பிரதேசங்களில் வசிக்கும் மாணவர்கள் இணைய வழிக்கல்வியைப் பெற்றுக்கொள்வதற்காகப் பல்வேறு தடைகளையும் கடந்து, அதில் ஆர்வத்துடன் ஈடுபடுகின்றனர் என்று அமெரிக்காவைத் தளமாகக் கொண்டியங்கும் ஆங்கில ஊடகமொன்றில் வெளியாகியிருக்கும் கட்டுரையை மேற்கோள்காட்டி அவர் இந்தக் கருத்தைப் பதிவிட்டுள்ளார். (ஓ.4)



## பாலியல் தொழிலுக்கு வெளிநாட்டவரை அழைத்து வந்த உள்ளூர் முகவர் கைது

கொழும்பு,ஜூலை 21

உஸ்பெகிஸ்தானைச் சேர்ந்த பெண்ணொருவரை, இலங்கைக்கு அழைத்து வந்து பாலியல் வர்த்தகத்தில் ஈடுபடுத்தினார் என்ற குற்றச்சாட்டில், வெள்ளவத்தைப் பகுதியைச் சேர்ந்த ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இடம்பெயர்வுக்கான சர்வதேச அமைப்பு அளித்த முறைப்பாட்டுக்கு அமைவாக, குற்றப் புலனாய்வுப் பிரிவினர் சந்தேகநபரைக் கைதுசெய்துள்ளனர்.

சந்தேகநபர் கடந்த ஆண்டு உஸ்பெகிஸ்தானை சேர்ந்த பெண்ணை இலங்கைக்கு அழைத்து வந்துள்ளார். இவரது மனைவி உஸ்பெக் நாட்டவர். இதே குற்றத்துக்காக இலங்கையில் நீதிமன்றால் தண்டனை விதிக்கப்பட்டு, தற்சமயம் அவர் சிறைத் தண்டனை அனுபவித்து வருகின்றார்.

மனிதக் கடத்தல் குற்றச்சாட்டின் கீழ் சந்தேகநபருக்கு எதிரான குற்றம் நிரூபிக்கப்பட்டால், 10 முதல் 20 ஆண்டுகள் வரை கடுமையான சிறைத்தண்டனை விதிக்கப்படும் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார். (ஓ.4)

# நாட்டுக்கு உள்ள கடன்களை மக்களிடமே அறவிட முடியும்

## பந்துல கண்டுபிடிப்பு

கொழும்பு,ஜூலை 21

**நாட்டில் சர்வதேச கடன்கள், தேசிய கடன்கள் மற்றும் அதற்கான வட்டிகளைச் செலுத்த பல பில்லியன் ரூபா நிதி தேவைப்படுகின்றது என்பது உண்மை. இந்தக் கடன்களுக்கான பணத்தை மக்களிடம் இருந்தே அறவிட வேண்டியுள்ளது. மாறாக பிரதமர் வீட்டில் இருந்து கொண்டுவர முடியாது**



இவ்வாறு அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

நாடாளுமன்றில் அமைச்சர் உதய கம்மன்பிலவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான முதல்நாள் விவாதத்தில் உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

வெளிநாட்டு கையிருப்பு நெருக்கடி மற்றும் பொருளாதார ரீதியிலான நெருக்கடிகளை நாம் எதிர்கொண்டு வருகின்றோம். இதற்கிடையில் மக்களுக்கு சலுகைகள் வழங்குவதென்றாலும் அதனையும் மக்களின் வரிகளிலேயே பெற்றுக்கொடுக்க வேண்டியுள்ளது.

2020ஆம் ஆண்டில் வரிகளின் மூலமாக ஆயிரத்து 216 பில்லியன் ரூபா பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளது. ஆனால் அதே ஆண்டில் அரச துறை ஊழியர்களுக்கு கொடுப்பனவாக ஆயிரத்து 15 பில்லியன் ரூபா கொடுக்கப்பட்டுள்ளது. ஆகவே இவ்வாறான நெருக்கடி நிலையிலேயே நாம் உள்ளோம். இதற்கு மேலாக அரச கடன்களைச் செலுத்த முடியாது- என்றார். (ஓ.4)

## தூத்துக்குடியில் பாதுகாப்பு: இந்தியத் தூதரகம் விளக்கம்


கொழும்பு,ஜூலை 21

தமிழகத்தின் தூத்துக்குடியை அண்மித்த கடல் பகுதியில் நீர்மூழ்கிக் கப்பல் நிறுத்தப்பட்டமை தொடர்பில், வெளியான செய்திகள் ஊகங்களை அடிப்படையாகக் கொண்டவை என்று இந்தியத் தூதரகம் தெரிவித்துள்ளது.

இந்தியக் கடற்படையுடன் சம்பந்தப்பட்ட மற்றும் இது போன்ற தகவல்களுக்கு தூதரகம் கருத்துத் தெரிவிப்பதில்லை.

எவ்வாறாயினும், நீர்மூழ்கிக் கப்பல்கள் அல்லது பிறதேசிய சொத்துக்களை இந்தியா பயன்படுத்துவது தொடர்பான முடிவுகள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளால் முன்னெடுக்கப்படுகின்றன என்றும் தூதரகம் விளக்கமளித்துள்ளது.

இலங்கையில் சீனாவின் ஆதிக்கம் அதிகரித்துள்ளதை அடுத்து, இந்தியக் கடற்படைக்குச் சொந்தமான அதிநவீன நீர்மூழ்கிக் கப்பலான 'சிந்துஷாஸ்ட்ரா' தூத்துக்குடி துறைமுகத்திலுள்ள கடற்படைக் கப்பல் தளத்தில் நிலை நிறுத்தப்பட்டுள்ளது என்று செய்திகள் வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஓ.4)



## 1.225 கி.கிராம் ஹெரோய்னுடன் இருவர் கைது

கொழும்பு,ஜூலை 21

ஒரு கிலோவுக்கும் அதிகமாக ஹெரோய்ன் போதைப்பொருளுடன் பெண் உள்ளிட்ட இருவர், ஜாஎல, கொட்டுகொட பகுதியில், குற்றத் தடுப்புப் பிரிவு அதிகாரிகளால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

அவர்களிடமிருந்து 1.225 கிலோக்கிராம் ஹெரோய்ன் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. போதைப்பொருள் வர்த்தகத்தின் மூலம் சம்பாதித்த 8 லட்சத்து 68 ஆயிரத்து 900 ரூபா பணமும் மீட்கப்பட்டுள்ளது.

26 வயதுடைய பெண்ணொருவரும், 29 வயதுடைய ஆணொருவருமே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர். சந்தேகநபர்கள் [illegible] பகுதியில் வசிப்பவர்கள் என்று பொலிஸார் தெரிவித்தனர்.(ஓ.4)

## தமிழீழத்தை அங்கீகரித்தால் வெளிநாடுகள் சுரண்டாது

### தமிழர்கள் அமைப்பு வலியுறுத்து

கொழும்பு,ஜூலை 21

தமிழீழத்தை இலங்கை அங்கீகரித்தால், சீனா, இந்தியா போன்ற வெளிநாடுகள், இலங்கையைச் சுரண்ட வாய்ப்பில்லை என்று பைடனுக்கான தமிழர்கள் அமைப்பு வலியுறுத்தியுள்ளது. இது தொடர்பில் அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நல்ல ஆலோசனையைப் பரிசீலிக்க இலங்கையை வலியுறுத்துகிறோம். இலங்கை பல கடினமான காலங்களைக் கடந்து வருகின்றது. நிலைமை இப்போது இந்தோனேசியாவைப் போலவே உள்ளது.

அங்குள்ள கலவரங்கள் உணவுப் பற்றாக்குறை மற்றும் வெகுஜன வேலையின்மை உள்ளிட்ட பொருளாதார சிக்கல்களால் தூண்டப்பட்டன. இது இறுதியில் ஜனாதிபதி சுஹார்டோவின் ராஜினாமாவுக்கு வழிவகுத்தது.

இந்தோனேசியாவிலிருந்து கிழக்கு திமோரின் சுதந்திரத்துக்கு வழி வகுத்தது. எனவே தமிழர்கள் தங்கள் சொந்த நாட்டை உருவாக்க இலங்கை அனுமதிக்க வேண்டும். இது இலங்கையை அதன் பொருளாதார அழுத்தத்திலிருந்து விடுவித்து, சொந்தப் பொருளாதார விவகாரங்களை மிகவும் திறம்பட நிர்வகிக்க அனுமதிக்கும்.

அதைவிட முக்கியமாக இலங்கையர்கள் நிம்மதியாக வாழ முடியும். தமிழர்கள் தங்கள் நாட்டை வழிநடத்த அனுமதிக்க அனைத்து தரப்பினரும் பரஸ்பரம் ஒப்புக்கொள்ள வேண்டிய நேரம் இது.

இது சரியான அரசியல் நடவடிக்கை மட்டுமல்ல, பொருளாதார ரீதியாக மிகச்சிறந்த நடவடிக்கை, என்றுள்ளது. (ஓ.4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 17 • 09 • 1962



இறப்பு 21 • 07 • 2018

**தவராசா செபராணி (ராதா)**

மீளாத்துயில் கொண்டு எம்மை
ஆறாத்துயரில் ஆழ்த்தி விட்டுச் சென்றீரோ?
கலையாத உங்கள் நினைவுடன்
எம் இதயத்தில் சோக
நிலையோடு ஏங்கித் தவிக்கிறோம்.

தி. கந்தசாமி குடும்பத்தினர்.

---

ஓம் விராட் விஸ்வ பிரமனே நமக

## 31ம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 12 • 01 • 1947



மறைவு 21 • 06 • 2021

அமரர்
**திருமதி சித்திரவேல் பவளராணி**

காலங்கள் கடந்தாலும் சில நினைவுகள்
ஞாலத்தில் அழிந்து போவது இல்லை
காலத்தின் கணக்கு முடியும் வரை – நாம் காத்திருப்போம்
ஞாலத்தில் வாழ மீண்டும் வருவீர்கள் என்று
– காத்திருப்போம் அம்மா

மான் பாடசாலை வீதி,
டச் றோட் - உடுவில்

மகன் கிருஸ்ணா
மருமகள் சுகன்யா
பேரப்பிள்ளைகள்

---

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



உலர்வு 15 • 09 • 1950

உதிர்வு 21 • 06 • 2021

கடந்த 21.06.2021 சிவபதமடைந்த
எமது குடும்பத் தலைவி

**அமரர் விஜயசரஸ்வதி**
**குகானந்தராஜா**

அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகளைத் தொடர்ந்து இன்று (21.07.2021) புதன்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் **சுன்னாகம் கதிரமலை சிவன் தேவஸ்தான திருமண மண்டபத்தில்** நடைபெற இருக்கும் அமரரது ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இல.424, கே.கே.எஸ். வீதி,
உடுவில் கிழக்கு,
உடுவில்.

குடும்பத்தினர்.

---

# முஸ்லிம்களின் திருமண சட்டக்கோவையில் திருத்தம்

கொழும்பு,ஜுலை 21

இலங்கைப் பிரஜைகளின் திருமணம் மற்றும் விவாகரத்து நிர்வகிக்கப்படும் பொதுச் சட்டத்தின் கீழ், முஸ்லிம் சமூகத்தவர்களின் திருமணம் மற்றும் விவாகரத்துக்களும் உள்ளடக்கப்படும் வகையில், குடியியல் சட்டக் கோவையின் திருமண வழக்குகள் தொடர்பான நடைமுறைகளைத் திருத்தம் செய்வதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

இனம், மதம், மொழி, சாதி, பால், அரசியல் கொள்கை அல்லது பிறப்பிடம் காரணமாக அல்லது அத்தகைய காரணங்களுள் ஏதோவொன்றினால் எந்தப் பிரஜைகளையும் ஓரங்கட்டுதல் ஆகாது என்று அரசலமைப்பின் 12 ஆவது சரத்தில் ஏற்பாடுகள் விதிக்கப்பட் டுள்ளன.

எனினும் முஸ்லிம்களின் திருமணம் மற்றும் விவாகரத்து நிர்வகிக்கப்படும் முஸ்லிம் திருமண மற்றும் விவாகரத்துச் சட்டத்தில் பெண்கள் ஓரங்கட்டப்படும் ஒரு சில ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

அவ்வாறான ஏற்பாடுகளை சட்டத்திலிருந்து நீக்குவதற்கான தேவையை பல்வேறு மகளிர் அமைப்புக்கள், முஸ்லிம் சமூகத்தவர்கள் மற்றும் சட்ட நிபுணர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். அதனால், இலங்கைப் பிரஜைகளின் திருமணம் மற்றும் விவாகரத்து நிர்வகிக்கப்படும் பொதுச் சட்டத்தின் கீழ், முஸ்லிம் சமூகத்தவர்களின் திருமணம் மற்றும் விவாகரத்து நிர்வகிக்கப்படும் மாற்று வழிகளை அவர்களுக்கு வழங்குவது உகந்ததெனக் கண்டறியப்பட்டுள்ளது.

அதற்கமைய, இஸ்லாம் மதத்தைப் பின்பற்றுபவர்கள் திருமணப் பதிவுக் கட்டளைச் சட்டத்தின் கீழ் திருமணம் செய்வதற்கு எதிர்பார்ப்பதாயின், அவர்களுக்கு குறித்த கட்டளைச் சட்டத்தின் கீழ் நிர்வகிக்கப்படும் வகையில் குடியியல் சட்டக் கோவை மற்றும் குடியியல் நடவடிக்கை முறை சட்டக் கோவையில் உள்வாங்கப்பட்டுள்ள திருமண வழக்குகள் தொடர்பான நடைமுறைகளைத் திருத்தம் செய்வதற்கு, நீதி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (ஒ.4)

---

## ஏல விற்பனை

ஆடியபாதம் வீதி, கல்வியங்காடு (சந்தை அருகில்) அமைந்துள்ள ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்மன் ஆலயத்தில் பழைய கட்டடப் பொருட்களான பழைய தட்டை ஓடு, பழைய முகட்டு ஓடு, புதிய ஓடு மற்றும் பழைய சிலாகைகள் (24.07.2021) சனி முற்பகல் 10.00 மணிக்கு ஆலய மண்டபத்தில் ஏல விற்பனை நடைபெற இருப்பதால் ஆர்வமுள்ளவர்கள் பங்குபற்ற முடியும் என்று அறியத்தருகின்றோம்.

தொடர்புகொள்ளவேண்டிய தொலைபேசி இலக்கம்
**077 9588 457**

செயலாளர்.

---

## DINU DISTRIBUTORS

An authorized Distributors for Cargills Agri Foods and Aqua mint Bottled Water

## வேலைவாய்ப்பு

மேற்படி விநியோக நிறுவனத்திற்கு, பின்வரும் பதவிகளுக்கு வேலையாட்கள் தேவைப்படுகின்றனர்.

Accounts Assistant (பெண்)
Office Assistant (பெண்)

வயதெல்லை:18-25 கல்வித்தகமை:க.பொ.த(உ.த)
அனுபவம் தேவையில்லை, பயிற்சிகள் வழங்கப்படும்

ஆர்வமுடையோர் தொடர்புகொள்ளவும்

**0775579729** 154 A. நாவலர் வீதி, யாழ்ப்பாணம்

---

## கண்ணீர் அஞ்சலி



எமது நிறுவனத்தின் முன்னாள் பணியாளர்
**திருமதி உருத்திரபாலன் மாலா**
அவர்களின் மறைவையிட்டு ஆறாத் துயரில் ஆழ்ந்திருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இல. 140, பரமேஸ்வராச் சந்தி
திருநெல்வேலி.

எம் இராஜநாயகம் அன்ட் கம்பனி
பட்டயக்கணக்காளர் நிறுவன
உரிமையாளரும் பணியாளர்களும்

---

## கண்ணீர் அஞ்சலி



எமது அலுவலகத்தில் முகாமைத்துவ உதவியாளராக கடமையாற்றும் திரு. க. தர்சன் அவர்களின் அன்பு மாமியார்
அமரர்
**திருமதி யோகேஸ்வரி நடராஜா**
அவர்கள் (15.07.2021) வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்தமையால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தாருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உழியர் நலன்புரிச் சங்கம் யாழ்ப்பாண ...
தென்னைப் பயிர்ச்செய்கைச் சபை ...

---

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

அமரர் திருமதி
**தங்கம்மா**
**வைரமுத்து**

திதி : துவாதசி



அம்மா, அம்மம்மா,
- அன்புப் பூட்டியே
இனி என்று உனை
- காண்போம் நாம்
கண்ணகை அம்பாள்
- அடி துயில் கொள்!

இன்று (21.07.2021) புதன்கிழமை அன்று நடைபெறும் 31 ஆம் நாள் நினைவ அஞ்சலி மற்றும் அந்தியேட்டி சபிண்டீகரண நிகழ்வுகளில் அனைவரையும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் அழைத்து நிற்கிறோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!!!

கச்சாய் வீதி,
சாவகச்சேரி

குடும்பத்தினர்

---

## வீடு வாடகைக்கு

கிளிநொச்சி விவேகானந்தா நகரில் வீடு ஒன்று உடன் வாடகைக்குண்டு. ...

0777 ... 716

---

வயது 1 வருடம் - ...
(இன்று - புதன்கிழமை மட்டும்) - மானிப்பாய்.

077 754 5068

---

## தொழிலாளர் தேவை

வடமாகாணத்தில் இயங்கும்
**தேங்காய் எண்ணெய்**
**உற்பத்தி நிலையத்திற்கு**
தொழிலாளர் தேவை.
தொடர்பு: 077 354 7045

---

## அழகிய வீடொன்றினை கட்டவேண்டுமா?

உங்கள் விருப்பம் பண வசதிக்கேற்ப அழகிய வீடொன்றினைக் கட்ட

**New Blue Ladder Construction (Pvt) Ltd Jaffna**

**077 664 4832**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

மண்ணில் 07 . 05 . 1963



விண்ணில் 13 . 07 . 2021

## வசந்தி ஜெயராஜ்

சரவணை கிழக்கு வேலணையைப் பிறப்பிடமாகவும் கல்கிசன் வீதி, திருகோண மலையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வசந்தி ஜெயராஜ் (சமூக தீபம் கலை மாமணி, சிரேஸ்ட சன சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர், உள்ளூராட்சித் திணைக் களம், திருகோணமலை) கடந்த 13.07.2021 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கனகசபை மற்றும் திருக்கேதீஸ்வரி தம்பதியினரின் அன்பு மகளும், துரையப்பா திலகேஸ்வரியின் மருமகளும், ஜெயராஜ்ஜின் துணைவியாரும், யதுகுலனின் (பொறியியலாளர், இந்தியா) பாசமிகு தாயாரும், வாசுகி, வாசுதேவன் (மொழி பெயர்ப்பாளர், பிரான்ஸ்), வாகீஸ்வரி (ஈசு), வாசவன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்ற ரவீந்திரன் மற்றும் அந்திமரியாள் (பிரான்ஸ்), மோகனகுமார் (ஆட்டோ ராசன்), அஜந்தா (பிரான்ஸ்) ஆகியோரின் மைத்துனியும், மதுரன் (டான் ரீவி), வாகீசன், மாதுரி, மாதங்கி ஆகியோரின் பாசமிகு சிறிய தாயாரும், ஆதவன் (பிரான்ஸ்), வேலன் (பிரான்ஸ்), வித்தன் (பிரான்ஸ்), விந்தகன் (பிரான்ஸ்), விசாலி (பிரான்ஸ்) ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கடந்த (15.07.2021) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் வேலணை இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகள் வேலணை சாட்டி இந்து மயானத்தில் நடைபெற்றது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

**தகவல் : குடும்பத்தினர்**

# தெமட்டகொடவில் 30 வீதமானோருக்கு டெல்டா வைரஸ் தொற்று உறுதி

கொழும்பு,ஜுலை 21

கொழும்பு தெமட்டகொட பகுதியில் பெற்றுக் கொள்ளப்பட்ட மாதிரிகளில், 30 வீத மானோருக்கு டெல்டா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அதனால் விசேட அனுமதி பெற்று இந்தப் பகுதியில் 18 வயதுக்கு மேற்பட்ட சகலருக் கும் கொரோனாத் தடுப்பூசி செலுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று கொழும்பு மாநகர சபையின் பிரதம மருத்துவ அதிகாரி ருவன் விஜேமுனி தெரிவித் துள்ளார். தரவை அடிப்படையாகக் கொண்டு கொழும்பு மாவட்டத்தின் நிலைமையை மதிப்பிடுவது கடினம்.

எனினும் டெல்டா வைரஸ் தொற்றுக்கு உள்ளானவர்கள் சமூகத்தில் நிச்சயம் காணப் படுவர் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஒ,4)

## ஒப்பந்த அடிப்படையிலான தொழிநுட்ப உத்தியோகத்தர் பதவிக்கு ஆட்சேர்த்தல்

### முல்லைத்தீவு மாவட்டம்

கிராமிய வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை மற்றும் கட்டிடப்பொருட்கள் தொழில் மேம்பாட்டு இராஜங்க அமைச்சினால் வடக்கு, கிழக்கில் உள்நாட்டில் இடம்பெயர்ந்து மீள்குடியமர்ந்த மற்றும் இந்தியாவிலிருந்து மீளத்திரும்பி யவர்களுக்காக 2021ம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்படும் வீடமைப்புத் திட்டத்தில் முல்லைத்தீவு மாவட்டத்தில் அமைக்கப்படவுள்ள வீடுகளை தொழிநுட்ப மேற்பார்வை செய்வதற்கு பின்வரும் தகைமையுடையோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

தேசிய பயிலுனர் மற்றும் தொழிற்பயிற்சி அதிகார சபையினால் வழங்கப்படும் தேசிய பொறியியல் டிப்ளோமா (சிவில்) சான்றிதழ் அல்லது கல்வி உயர்கல்வி அமைச்சினால் வழங்கப்படும் தேசிய உயர் பொறியியல் சான்றிதழ் (சிவில்) தகைமையுடன் ஆகக்குறைந்தது இரண்டு வருட முன் அனுபவமுள்ள விண்ணப் பதாரர்கள் தங்களது சுய விபரத்தினை தங்கள் தொலைபேசி இலக்கத்துடன் 26.07.2021ம் திகதிக்கு முன்னர் dsdpsmullaitivu@gmail.com என்னும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

நேர்முகப்பரீட்சைக்கான திகதி மின்னஞ்சல் மற்றும் தொலைபேசி ஊடாக அறியத்தரப்படும்.

**க.விமலநாதன்**
**மாவட்ட செயலாளர் / அரசாங்க அதிபர்**
**மாவட்ட செயலகம்**
**முல்லைத்தீவு**

# மரண அறிவித்தல்

## திருமதி சௌபாக்கியவதி (சிவபாக்கியம்) முத்துலிங்கம்



புங்குடுதீவு 12ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், இல 224, இராமநாதன் வீதி, திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட சௌபாக்கியவதி முத்துலிங்கம் அவர்கள் நேற்று (20.07.2021) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முத்தையா மற்றும் தங்கக்குட்டியின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சபாபதிப்பிள்ளை நாக முத்து தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற முத்து லிங்கத்தின் அன்பு மனைவியும், மதியழகன், மதிமோகன், மதிரஞ்சன், ரூபதர்சனா, ஆகியோரின் பாசமிகு தாயாரும், சசிகலா, ஜெகதீஸ்வரி, சிவகுமாரி, நிரஞ்சன் ஆகியோரின் அன்பு மாமியாரும், சண்முகலிங்கம், காலஞ்சென்ற சிவலோகநாதன், மற்றும் யோகநாதன், செல்வராணி, பத்மராணி, காலஞ்சென்ற கமலநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், சரோஜினிதேவி, கலைச்செல்வி, சியாமளா, சிவலிங்கநாதன், கோகுலதாசன், காலஞ்சென்ற இராசலிங்கம், மற்றும் சண்முகலிங்கம், புவனேஸ் வரி ஆகியோரின் அன்பு மைத்துனியும், டிலக்ஷனா, லதீசன், தர்ஷனன், பிரதீஷன், அஷ்மிரன், சபரிஷா, ஆரன், விஹான் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.07.2021) புதன் கிழமை மதியம் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தோற்றம் 05.05.1945 மறைவு 20.07.2021

224, இராமநாதன் வீதி,
திருநெல்வேலி
0212227652

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 1,511 பேருக்கு நேற்று தொற்று

கொழும்பு, ஜூலை 21
நாட்டில் நேற்று 1,511 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இதன்படி நாட்டில் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 2 லட்சத்து 87 ஆயிரத்து 930ஆக அதிகரித்துள்ளது.
அத்துடன், கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 980 பேர் நேற்று குணமடைந்து வீடு திரும்பினர். இதையடுத்து நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 2 இலட்சத்து 62 ஆயிரத்து 828ஆக உயர்வடைந்துள்ளது. இதேவேளை, கொரோனாத் தொற்று காரணமாக வைத்தியசாலைகள் மற்றும் தனிமைப்படுத்தல் மையங்கள் என்பவற்றில் தற்போது 21 ஆயிரத்து 232 பேர் சிகிச்சை பெறுகின்றனர். (ம-22)

# மேலும் 43 பேர் சாவு மொத்தச் சாவு 3,870




கொழும்பு, ஜூலை 21
இலங்கையில் மேலும் 43 கொரோனாத் தொற்றாளர்கள் உயிரிழந்துள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் உறுதிப்படுத்தியுள்ளது. இவ்வாறு உயிரிழந்தவர்களில் 26 ஆண்களும், 17 பெண்களும் அடங்குகின்றனர் என்று அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.
இதற்கமைய நாட்டில் பதிவான கொரோனா மரணங்களின் மொத்த எண்ணிக்கை 3 ஆயிரத்து 870ஆக அதிகரித்துள்ளது. (ம-22)

# சட்டவரைவை எதிர்த்தவர்களே மீண்டும் அதனை ஆதரிப்பதா?

## ஐ.ம.சக்தி கிண்டல்



கொழும்பு.ஜூலை 21
ஜோன் கொத்தலாவல தேசிய பாதுகாப்புப் பல்கலைக்கழகச் சட்டவரைவு, கடந்த நல்லாட்சி அரசால் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்ட போது, அப்போதைய எதிர்க்கட்சியாக இருந்த தற்போதைய ஆளுந்தரப்பினர் அதற்குக் கடுமையான எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.
தற்போது அந்தச் சட்டவரைவில் குறைந்தபட்சம் நிறுத்தல் குறியீடுகளில் கூட மாற்றங்களைச் செய்யாமல், அதனை அவ்வாறே சமர்ப்பித்திருப்பது நகைப்புக்குரியது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் புத்திக பத்திரண தெரிவித்துள்ளார்.
இந்தச் சட்ட வரைவில் திருத்தங்களைச் செய்து அதனை நிறைவேற்றுவதென்பது பாதகமான தாக்கங்களை ஏற்படுத்தக் கூடும் என்பதால் அதனை முழுமையாக மீளப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஒ.4)







## சொந்த ரொக்கெட்டில்

# விண்வெளிப் பயணத்தை நிறைவுசெய்த பெசோஸ்

வொஷிங்டன், ஜூலை 21
உலகப் பெரும் பணக்காரர் ஜெப் பெசோஸ் சொந்த ரொக்கெட்டில் தனது விண்வெளிப் பயணத்தை வெற்றிகரமாக முடித்துத் திரும்பியுள்ளார். அமெரிக்காவின் மேற்கு டெக்சாஸ் மாகாணத்தில் உள்ள ரொக்கெட் ஏவுதளத்தில் இருந்து ஜெப் பெசோஸின் ப்ளூ ஆரிஜின் ரொக்கெட் புறப்பட்டது.
ஜெப் பெசோஸுடன் அவருடைய சகோதரர் மார்க் பெசோஸ், சிறப்பு விருந்தினராக வேலி பங் என்ற விண்வெளி வீராங்கனை மற்றும் ஆலிவர் டீமன் என்ற பணக்காரர் ஆகியோர் பயணப்பட்டனர். ஆலிவர் இந்தப் பயணத்துக்கான பயணச் சீட்டை இந்திய மதிப்பில் சுமார் ரூ.210 கோடிக்கு ஏலம் எடுத்திருந்தார்.
வேலி பேங்க், அன்று பெண் என்பதால் நாசாவின் விண்வெளித் திட்டத்தின் கீழ் விண்ணுக்குச் செல்ல முடியாமல் தவித்தார்.
இன்று உலகின் முதல்தர பணக்காரரின் விருந்தினராக விண்ணுக்குச் சென்றுள்ளார்.
எலான் மஸ்க், ரிச்சர்டு பிரான்ஸன் போன்றோரின் விண்வெளிப் பயண நிறுவனங்களுடனான விண்வெளிப் பயண போட்டியின் விளைவு இது. இந்தப் போட்டியில் சமீபத்தில் ரிச்சர்டு பிரான்ஸன் முந்திக்கொண்டார். அவர் விண்வெளி சென்று திரும்பிய 9ஆவது நாளான இன்று ஜெப்பெசோஸ் தனது பயணத்தை வெற்றிகரமாக முடித்தி ருக்கிறார். சில நிமிடங்களில் விண்வெளியைத் தொட்ட ராக்கெட் பின்னர் மீண்டும் பத்திரமாகத் தரையிறங்கியது. டெக்சாஸ் பாலைவனத்தில் தரையிறங்கியதும் அதிலிருந்து வெளிப்பட்ட ஜெப் பெசோஸ் உள்ளிட்டோர் உற்சாக மிகுதியில் காணப்பட்டனர். (ம)




# மரண அறிவித்தல்

## திருமதி கணேசானந்தர் மீனலோசனி



பிறப்பு 26.06.1945
இறப்பு 20.07.2021


உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் கலட்டி அம்மன் வீதியினை வசிப்பிடமாகவும் கொண்ட **திருமதி கணேசானந்தர் மீனலோசனி** அவர்கள் நேற்று (20.07.2021) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான இராசரத்தினம் - அற்புதம் (குண்டுமணி) தம்பதியரின் அன்பு மகளும், கணேசானந்தர் இன் பாசமிகு மனைவியும், லிஸ்ணுகாவின் பாசமிகு தாயாரும், கிருசாந்தின் மாமியும், ஒப்பிலா மணியின் சகோதரியும், தவமணியின் மைத்துனியும், லயாஷின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.07.2021) புதன்கிழமை காலை 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று நண்பகல் 12.00 மணியளவில் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

077 961 9778

தகவல்
குடும்பத்தினர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொது அறிவு



1.உலகில் மிகச் சிறிய முட்டை யிடும் பறவை இனம்?
ஹம்மிங் பறவை

2.உலகில் அதிக மருத்துவர்கள் உள்ள நாடு?
ரஷ்யா

3.மிருகங்களில் அதிக இரத்த ஓட்டத்தைக் கொண்ட பிராணி?
ஒட்டகச்சிவிங்கி

4.ஜனவரி மாதத்தில் சுதந்திர தினம் கொண்டாடும் நாடு?
சூடான்

5.உலகில் அதிக நாடுகளைக் கொண்ட கண்டம்?
ஆபிரிக்கா

# யார் முட்டாள்?




ஒரு காட்டில் புலியும், கழுதையும் நட்பாய் இருந்தன.
ஒரு நாள், "இந்த நீல நிற புற்கள் தான் எவ்வளவு அழகு..." என்று ஆச்சரியத்துடன் கூறியது கழுதை.
"நண்பா... புல்லின் நிறம் நீலமல்ல; பச்சை..." என்றது புலி.
அதை ஏற்க மறுத்து, "புல்லின் நிறம் கூட தெரியாதா மக்கு நீ..." என்று கிண்டலடித்தது கழுதை.
"சிங்கராஜாவிடம் போய், யார் மக்கு என கேட்கலாம், முட்டாள் கழுதையே..." என்று அழைத்தது புலி.
சிங்கத்தின் முன் அவை நின்றன.
"மகாராஜா... புல்லின் நிறம், நீலம் என்று புலிக்கு புரியவேயில்லை. இந்த முட்டாளை, ஓர் ஆண்டு சிறையில் அடையுங்கள்..." என்றது கழுதை.
அது கூறியபடி தண்டனையை நிறைவேற்ற தீர்ப்பளித்தது சிங்கம்.
மகிழ்ச்சியை தாங்க முடியாமல், கொடூரமாய் பாடியவாறு வெளியேறியது கழுதை.
நடந்ததை நம்ப முடியாமல் மிகவும் பரிதாபத்துடன்,
"மகாராஜா... புல்லின் நிறம் என்ன...?" என்றது புலி.
"பச்சை..."
"அதை தானே, நானும் சொன்னேன்..."
"சரியாகத்தான் சொல்லியிருக்கிறாய்..."
"பின் ஏன் எனக்கு தண்டனை தந்தீர்... நான் செய்த தவறு என்ன...?"
"புலியே... உன் வீரம் என்ன... அறிவு கூர்மை என்ன... கழுதை போன்ற பொதி சுமக்கும் விலங்குடன் உடன் அறிவை பரிசோதிக்கலாமா? அதனுடன் சண்டை போட்டு, என் முடிவை தெரிந்து கொள்ள வந்திருக்கிறாய்... சிந்திக்கும் திறனற்றவரோடு பழகி, முட்டாளாகி இருக்கிறாய். அதற்காகவே இந்த தண்டனை..." என்றது சிங்கம். தகுதியறிந்து நட்பு பாராட்ட வேண்டும். நல்ல தகுதியுள்ளவர்களிடம் தான் அறிவைப் பெற முடியும்.

# சார்லி சாப்ளின்

சோகம் மற்றும் வறுமையிலும் எம்மை சிரிக்க வைத்த சார்லி சாப்ளின் பற்றி சிறிது தெரிந்துகொள்வோம்.
ஏப்ரல் 16, 1889ம் ஆண்டு 'சார்லஸ் சாப்ளின் ஹன்னா சாப்ளின்' தம்பதிக்கு மகனாக பிறந்தார். சாப்ளினின் தந்தை குடிப் பழக்கத்தால் சாப்ளினின் பன்னிரண்டாவது வயதில் இறந்தார். இதனால் இவர் தாயும் பெரும் மன உளைச்சலுக்கு உள்ளாகி மன நலம் பாதிக்கப் பட்டார். பின்பு அவரும் 1928ஆம் ஆண்டில் இறந்தார்.
தாயும் தந்தையும் அன்புடனும் ஆதரவுடனும் கவனிக்க வேண்டிய குழந்தை பருவத்தில் சாப்ளினுக்குத் தனிமையே துணையானது.
'ஹான்வெல்' என்னும் ஆதரவற்ற சிறுவர்களுக்கான இல்லத்தில் சாப்ளின் சேர்க்கப்பட்டார். இங்கே சாப்ளின் சந்தித்ததெல்லாம் துயரங்களை மட்டுமே. துன்பங்களை சகித்துக்கொண்டு சாப்ளின் நாள்களை நகர்த்தினார். அதிக கண்ணீர் வடித்த நாள்கள் இவை எனப் பின்னாளில் சாப்ளின் குறிப்பிட்டுள்ளார். இருந்தாலும் சாதிக்க வேண்டும் என்கிற எண்ணம் மட்டும் இவருக்குள் ஓடியது.
முதன் முதலில் 1894ஆம் ஆண்டில் மியூசிக் ஹாலில் தனது ஐந்து வயதிலே ஒரு வேடத்தில் நடித்தார். பின்பு சிறு சிறு நாடகங்களில் நடித்து பிழைப்பை ஓட்டினார். 1913ஆம் ஆண்டில் சாப்ளின் கலிஃபோர்னியாவில் உள்ளகீஸ்டோன் ஸ்டுடியோவில் சேர்ந்தார். ஒரே ஆண்டில் சாப்ளின் அமெரிக்காவின் பிரபலமான நகைச்சுவை நடிகராக மாறினார். 1917ஆம் ஆண்டு சொந்தமாக ஸ்டுடியோவைக் கட்டினார். 1917 ஆம் ஆண்டிலேயே 1 மில்லியன் டாலர் ஊதியம் பெற்ற உலகின் முதல் நடிகர் இவர்தான்.
உலகில், கடைசி மனிதனின் முகத்தில் சிரிப்பு இருக்கும் வரை, அதில் சாப்ளின் உயிர் வாழ்ந்துகொண்டுதான் இருப்பார். தனது வேதனை, மற்றும் வலிகளைப் புன்னகையாக மாற்றி, சந்தோஷத்தை மட்டுமே நமக்கு கொடுத்த ஒரே கலைஞன் சார்லி சாப்ளின் மட்டுமே.

## வித்தியாசங்களை கண்டுபிடிப்போம்



## விமானம் வெள்ளை நிறத்தில் இருப்பதற்கான காரணம்

வெயில் மற்றும் புற ஊதா கதிர்வீச்சால் எல்லா வண்ணங்களும் பாதிக்கப்படும். விரைவில் மங்கிவிடும். ஆனால், வெள்ளை மங்காது.
நிறங்கள் எல்லாம் வெப்பத்தை உள்வாங்கும் தன்மை உடையவை. இதனால், அதிகம் சூடாகும் வாய்ப்பு உண்டு. வெள்ளை நிறம் ஒளி அலைநீளத்தை பிரதிபலிக்கிறது. அதிக வெப்பத்தை உள்வாங்காது. இதனால் அதிகமாக சூடாகாது விமானம்.
விமானத்துக்கு ஒருமுறை வண்ணம் பூச, 33 லட்சம் முதல், 1.33 கோடி ரூபாய் வரை செலவு ஆகும். வண்ணங்கள் எண்ணிக்கை அதிகரிக்கும் போது செலவும் அதிகரிக்கும். இதுபோன்ற காரணங்களால் விமானம் வெள்ளை நிறத்திலேயே இயக்கப்படுகிறது.





## கண்ணாடி உருவத்தைக் காட்டுவது எப்படி?



எல்லாப் பொருள்களிலும் மூலக்கூறுகள் இருக்கின்றன. ஒரு பொருளின் மீது ஒளி விழும்போது, அதன் அலைநீளத்தைப் பொறுத்து வினைகள் உருவாகின்றன. ஒரு பொருளில் உள்ள நுண்ணிய துகள்களில் அதிகமான அலைவு வீச்சு இருந்தால், அந்தப் பொருள் ஒளியை உள்வாங்கிக்கொள்ளும். இதை ஒளி ஊடுருவா பொருள் என்கிறார்கள்.
ஒரு பொருளின் நுண்ணிய துகள்களில் குறைவான அலைவு வீச்சு ஏற்பட்டால், அப்போது மூலக்கூறுகள் அடுத்தடுத்த துகள்களுக்கு அதிர்வைக் கடத்தி ஒரு முனையிலிருந்து மறு முனைக்குச் சென்றுவிடும். இதை ஒளிபுகும் பொருள் என்கிறார்கள். ஒரு பொருளின் மேற்புறத் துகள்கள் மட்டும் ஒளியின் தூண்டுதலால், பொருளின் உள்நோக்கிச் செல்லா மல், வந்த திசையிலேயே வெளிப்படும். இதைத்தான் பிரதிபலிப்பு என்கிறார்கள். கண்ணாடி ஒளியைக் கடத்தும். கண்ணாடியின் ஒரு பக்கத்தில் அலுமினியம், வெள்ளிப் பூச்சு போன்றவற்றைப் பூசும்போது கண்ணாடியின் உள்ளே ஊடுருவும் ஒளி, இந்தப் பூச்சில் பட்டு பிரதி பலிக்கும். இப்படித்தான் நம் உருவம் கண்ணாடியில் தெரிகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நம்பிக்கையில்லாப்...

நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவாக 61 வாக்குகளும், எதிராக 152 வாக்குகளும் அளிக்கப்பட்டன. இதன் அடிப்படையில் 91 மேலதிக வாக்குகளால் பிரேரணை தோற்கடிக்கப்பட்டது. வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பிலவுக்கு எதிராக 43 எம்.பிக்களின் கையொப்பத்துடன் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியால் முன்வைக்கப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணை நேற்றுமுன்தினமும் நேற்றும் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

நம்பிக்கையில்லாப் பிரேரணையை ஆதரித்து எதிரணி உறுப்பினர்களும், கடுமையாக எதிர்த்து ஆளுங்கட்சி உறுப்பினர்களும் உரையாற்றியதுடன் அதற்கான காரணங்களையும் முன்வைத்தனர். விவாதத்தின் முடிவில் வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பில பதிலளித்து உரையாற்றினார். தனக்கு ஆதரவு நல்கியவர்களுக்கு நன்றிகளை தெரிவித்து, எதிரணியால் முன்வைக்கப்பட்ட பிரேரணை சிறுபிள்ளைத்தனமானது என விசனத்தையும் முன்வைத்தார். இறுதியில் முஜிபூர் ரஹ்மான் உரையாற்றினார். அப்போது அவருக்கும், ஆளுங்கட்சி உறுப்பினர்களுக்குமிடையில் கடும் சொற்சமர் ஏற்பட்டது. இதனால் இறுதிக்கட்டத்தில் சபை நடவடிக்கை சூடுபிடித்தது.

முஜிபூர் ரஹ்மானின் உரை முடிவடைந்த பின்னர் கூச்சல், குழப்பமும் முடிவுக்கு வந்தது.

வாக்கெடுப்பின்போது பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஐக்கிய தேசியக் கட்சி, தமிழ் மக்கள் தேசிய முன்னணி, தேசிய மக்கள் சக்தி ஆகியன பிரேரணையை ஆதரித்து வாக்களித்தன.

பெரமுனவினரும், சுதந்திரக் கட்சியினரும், முஸ்லிம் எம்.பிக்களில் அனேகமானோரும் பிரேரணைக்கு எதிராக அதாவது கம்மன்பிலவுக்கு ஆதரவாக வாக்களித்தனர். (ம-44)

## அரசை...

டும் இவ்வாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ச தெரிவித்தார்.

வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பிலவுக்கு எதிராக பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியால் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை மூன்றிலிரண்டு பெரும்பான்மை வாக்குகளுடன் நேற்று தோற்கடிக்கப்பட்டது. அதன் பின்னர் நாடாளுமன்ற வளாகத்தில் ஊடகவியலாளர்களிடம் பிரதமர் கருத்துத் தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

'மக்கள் ஆணையால் நிறுவப்பட்டதே இந்த அரசு. அதற்கமைய வலுவான கட்டமைப்புடன் ஜனாதிபதியால் உருவாக்கப்பட்டதே இந்த அமைச்சரவை. இதில் உள்ளவர்களைத் தீர்மானிக்கும் அதிகாரம் மக்களால் நிராகரிக்கப்பட்ட எதிரணியினருக்கு இல்லை.

அமைச்சரவையின் அங்கீகாரத்துடனேயே எரிபொருள்களின் விலை அதிகரிக்கப்பட்டது. இந்த விலை அதிகரிப்பு நிரந்தரமல்ல. இதில் மாற்றங்கள் இடம்பெறும். அந்தவகையில் வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பிலவுக்கு எதிராக எதிரணி கொண்டுவந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை தேவையற்ற ஒன்று.

அரச கூட்டணி குடும்பம் போன்றது. இதற்குள் சில கருத்து முரண்பாடுகள் வரக்கூடும். அவை பேசித் தீர்க்கப்படும். ஆனால், எதிரணியினர் இதில் சுயலாப அரசியல் தேட முற்பட்டுள்ளனர். இறுதியில் அவர்கள் படுதோல்வியடைந்துள்ளனர். பலம்மிக்க எமது அரசை எவராலும் அசைக்கவே முடியாது. எதிரணியின் பிரேரணை மூலம் எமது அரசுக்குள் இருக்கும் பலம் மென்மேலும் அதிகரித்துள்ளது' என்றார். (ம-22)

## முஸ்லிம்...

தீனின் கட்சி உறுப்பினர்கள் மூவரும் வாக்களித்தனர். ரிஷாத் பதியுதீன் சபைக்கு சமூகமளிக்கவில்லை.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் பிரேரணைக்கு சார்பாக வாக்களித்திருந்தாலும் அந்தக் கட்சியின் ஏனைய எம்.பிக்கள் வாக்கெடுப்பை தவிர்த்து, ஆளுந்தரப்புக்கு மறைமுக ஆதரவை வெளிப்படுத்தினர். அகில இலங்கை காங்கிரஸ் உறுப்பினர்கள் நால்வரும், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் உறுப்பினர்கள் ஐவரும் நாடாளுமன்ற உறுப்பினர்களாக செயற்படுகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

அதேபோல 20ஆவது திருத்தச்சட்டத்துக்கு ஆதரவளித்ததால் தமிழ் முற்போக்கு கூட்டணியிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ள அரவிந்தகுமார் எம்.பியும் பிரேரணையை எதிர்த்து வாக்களித்தார். அதேவேளை, எரிபொருள் விலை அதிகரிப்பையடுத்து வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பில பதவி விலக வேண்டும் என்ற கருத்தை வெளியிட்டு பெரும் பரபரப்பை ஏற்படுத்திய பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசமும் கம்மன்பிலவுக்கு ஆதரவாகவே வாக்களித்தார்.

அரசுடன் முரண்பட்டுக் கொண்டிருக்கும் விஜயதாச ராஜபக்ச எம்.பி. வாக்கெடுப்பின்போது சபையில் இருக்கவில்லை. ஒட்டுமொத்த அரசுக்கு எதிராக அல்லாமல் தனி அமைச்சருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப்பட்டதை விமர்சித்த ரணில் விக்கிரமசிங்க, வாக்கெடுப்பை புறக்கணிப்பார் என அரசியல் களத்தில் எதிர்பார்க்கப்பட்ட நிலையில் அவர் அரசுக்கு எதிராக வாக்களித்தார். (ம-44)

## வடக்கு...

கடந்த 4ஆம் திகதியுடன் ஓய்வுபெற்றுச் சென்ற நிலையில், வடக்கு மாகாண பிரதம செயலாளர் பதவி வெற்றிடமாகக் காணப்பட்டது. இந்தப் பதவிக்கு இலங்கை நிர்வாக சேவையில் மூத்த அதிகாரிகளில் ஒருவரை நியமிக்க ஆராயப்பட்டது. இந்தப் பதவிக்காக வடக்கைச் சேர்ந்த பலரும் போட்டியிட்டனர்.

இந்தநிலையில், வவுனியா மாவட்டச் செயலர் எஸ்.எம்.சமன் பந்துலசேனவை வடக்கு மாகாண பிரதம செயலாளராக நியமிக்க ஜனாதிபதிக்கு நேற்றுமுன்தினம் பரிந்துரைக்கப்பட்டது. இதற்கமைய நேற்று அவருக்கான நியமனக் கடிதம் வழங்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாணத்துக்கு முதன்முறையாக பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த பிரதம செயலாளர் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதையடுத்து இலங்கையிலுள்ள 9 மாகாணங்களிலும் தற்போது பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர்களே பிரதம செயலாளர்களாக உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-22)

## விரைவில்...

வர் சங்கத்தின் தலைவர் விசேட வைத்திய நிபுணர் பத்மா குணரத்ன இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

'புத்தாண்டுக்கு அண்மித்த காலப்பகுதியிலேயே நாட்டில் 3ஆவது அலை உருவானது. இதனால் மருத்துவமனைகளில் சிகிச்சைபெறும் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டு மருத்துவமனைக் கட்டமைப்பு நெருக்கடி நிலையை எதிர்கொண்டது. இந்த நிலையில் மே மாதமளவில் கடும் பயணக்கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. இதன் பயனாக ஜூன் 11ஆம் திகதியளவில் தொற்றாளர்களின் எண்ணிக்கையில் ஓரளவு குறைவு ஏற்பட்டது. நிலைமையை முகாமை செய்யக்கூடிய நிலைமை ஏற்பட்டது. நாளாந்தம் சராசரி 3,000 என்று காணப்பட்ட தொற்றாளர்களின் எண்ணிக்கை 1,500 எனக் குறைந்தது.

தற்போதைய நிலைவரப்படி மீண்டும் பழைய நிலைக்கு மருத்துவமனைக் கட்டமைப்பு செல்கின்றது. இதனை 4ஆவது அலையாக நாம் அடையாளப்படுத்தலாம். அதாவது 4ஆவது அலையின் ஆரம்ப கட்டத்தை நெருங்கிக் கொண்டிருக்கின்றோம்.

நாட்டில் தடுப்பூசி ஏற்றும் பணி துரிதப்படுத்தப்பட்டுள்ளது. இதனை வரவேற்கின்றோம். அரசுக்கு நன்றி தெரிவிக்கின்றோம். இப்பணி தொடர்ந்தும் முன்னெடுக்கப்படவேண்டும். இதன்மூலம் மக்களுக்கு பாதுகாப்பு கிட்டும். ஆனால் தடுப்பூசிமீது மட்டும் நம்பிக்கை வைத்து, மீண்டும் இயல்பு நிலைக்கு உடன் சென்றுவிடலாம் என நினைப்பது தவறாகும்.

கொழும்பு நகரசபை எல்லையில் 30 வீதம் டெல்டா தொற்று காணப்படுகின்றது. டெல்டா பரவும் வேகமும் அதிகம். எனவே, நாட்டை முழுமையாக திறந்து சுதந்திரமாக நடமாடினால் இரு வாரங்களுக்குள் நாடு முழுவதும் டெல்டா பரவும்.

நாட்டில் நூற்றுக்கு 8 வீதமானோருக்கே முழுமையாக தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது. 25 வீதமானோர் முதலாவது டோஸை பெற்றுள்ளனர். இரண்டாவது டோஸையும் பெற்று இரு வாரங்களுக்கு பின்னரே உரிய பாதுகாப்பு கிடைக்கும். எனவே, தடுப்பூசி துரிதப்பட்டுள்ளதால் தற்போது பாதுகாப்பு என்ற நிலைக்கு எவரும் வந்துவிடக்கூடாது.

முதியோர் மற்றும் நாட்பட்ட நோயினால் பீடிக்கப்பட்டுள்ளவர்களே அதிகம் பாதிக்கப்படுகின்றனர். இவர்கள் கட்டாயம் தடுப்பூசி ஏற்றிக்கொள்ள வேண்டும். 4ஆவது அலையில் இருந்து அவர்களை பாதுகாத்துக்கொள்ள வேண்டும். திருமண நிகழ்வு, சினிமா உள்ளிட்ட விடயங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இவ்விடங்களில் தொற்று பரவும் அபாயம் உள்ளது. எனவே, மக்கள் விழிப்பாக இருக்க வேண்டும்.' என்றார். (ம-44)

## வவு.வில்....

பியபோதே மேற்படி பெண் கடத்தப்பட்டுள்ளார். சுமார் 2 மணிநேரம் அந்தப் பெண்ணை வானில் கொண்டுதிரிந்த மேற்படி நபர்கள் அவர் அணிந்திருந்த 3 பவுண் காப்பை கழற்றிவிட்டு பெண்ணை மடுகந்தை பகுதியில் இறக்கிவிட்டுச் சென்றுள்ளனர் என்று பொலிஸாரின் முறைப்பாட்டில் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். கடத்தப்பட்ட பெண் சுமார் 9 பவுண் நகைகளை அணிந்திருந்த போதிலும் 3 பவுண் காப்பை மட்டுமே கொள்ளைக் காரர்கள் கழற்றியெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-18)

## இணுவிலில்...

அவரது மனைவியும் படுகாயமடைந்து யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

மகனைத் தேடிவந்த நிலையில் அவர் வீட்டில் இல்லாததையடுத்து தந்தை மற்றும் தாயைத் தாக்கிவிட்டு வன்முறைக் கும்பல் தப்பித்துள்ளது என்று கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர். சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம-26)

## யாழ்ப்பாணத்தில்...

பெற்றுவந்த யாழ்ப்பாணம் குருநகரைச் சேர்ந்த 75 வயதுடைய பெண்ணொருவரே நேற்று உயிரிழந்துள்ளார்.

இது கொரோனாவால் யாழ்ப்பாணத்தில் பதிவான 116ஆவது இறப்பாகும். (ம-26)

## காய்ச்சலுக்கு...

துள்ளது. கடந்த 18ஆம் திகதி குழந்தைக்குக் காய்ச்சல் வந்துள்ளது. இதையடுத்து தனியார் மருத்துவமனையில் மருந்தெடுத்த பின்னர் மறுநாள் (நேற்றுமுன்தினம்) மீண்டும் காய்ச்சல் ஏற்பட்டுள்ளது. இதையடுத்து அந்தக் குழந்தை முழங்காவில் மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டது. எனினும் சிகிச்சை பயனளிக்காமல் நேற்று குழந்தை உயிரிழந்தது.

இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமச்சிவாயம் பிறேமகுமார் மேற்கொண்டார். (ம-26)

## யாழ்.....

டங்களில் அவர் கலந்துகொள்ளவுள்ளார்.

தெல்லிப்பழையில் வீடுகள் மற்றும் காணி உறுதிப் பத்திரங்களை கையளிக்கும் நிகழ்வு, நயினாதீவு நன்னீர் குடிதண்ணீர்த் திட்டத்தை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வு, வேலணையில் 100 நகர அபிவிருத்தியின் இரண்டாம்கட்டத்தை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வு, தாழையடியில் கடல்நீரை நன்னீராக்கும் திட்டத்தை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வு ஆகியவற்றில் மஹிந்த பங்கெடுக்கின்றார்.

அத்துடன் யாழ்ப்பாணத்தில் மதத் தலங்களுக்கும் சென்று வழிபாடுகளில் ஈடுபடவுள்ளதுடன் யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தில் சிறப்புச் சந்திப்புக்களையும் கலந்துரையாடல்களையும் அவர் நடத்தவுள்ளார் என்று தகவல்கள் வெளிவந்துள்ளன. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

© 2000 Agfa-Gevaert N.V.

# தொடரைக் கைப்பற்றியது இந்தியா!

## மிக நீண்ட நாள்களின் பின்னர் இலங்கை திருப்திகர ஆட்டம்

**கொழும்பு, ஜூலை 21**

**இலங்கைக்கு எதிராக நேற்று நடைபெற்ற இரண்டாவது ஒருநாள் ஆட்டத்தில் மிகப்பெரும் போராடத்தின் பின்னர் வெற்றிபெற்று தொடரைக் கைப்பற்றுவதை உறுதி செய்தது இந்திய அணி.**




இந்த இரு அணிகளுக்கும் இடையிலான முதலாவது ஆட்டத்தில் இந்திய அணி வெற்றிபெற்றிருந்த நிலையில் நேற்று நடைபெற்ற இரண்டாவது ஆட்டத்தில் இந்தியா வெற்றிபெற்றால் தொடர் இந்தியாவிடம் சென்றுவிடும் என்ற நிலையிலும், தொடரில் தன் இருப்பைத் தக்கவைக்க வெற்றிபெற்றே ஆக வேண்டும் என்ற கட்டாயத்தில் இலங்கையும் களமிறங்கின.

முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 9 இலக்குகளை இழந்து 275 ஓட்டங்களைக் குவித்தது. அந்த அணியின் ஆரம்ப வீரர்களான அவிஸ்க பெர்னான்டோ, மினொட் பானுக இருவரும் அற்புதமான அத்திபாரத்தை அமைத்துக் கொடுத்தனர். 50 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் அவிஸ்க. பானுக ராஜபக்ச ஓட்டமெதையும் பெறவில்லை. மத்திய வரிசையில் அசலன்க 65 ஓட்டங்களைப் பெற்றார். பின்வரிசையில் அற்புதமாக விளையாடிய சாமிக கருணாரத்ன ஆட்டமிழக்காமல் 44 ஓட்டங்களைப் பெற்று அணியைப் பலப்படுத்தினார்.

பந்துவீச்சில் புவனேஸ்வர் குமார், சகல் இருவரும் தலா 3 இலக்குகளையும், டீபக் சகர் 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய இந்திய அணிக்கு ஆரம்ப வீரர் பிருத்வி ஏமாற்றம் கொடுத்தார். அவரை 13 ஓட்டங்களுடன் வெளியேற்றினார் வனிந்து ஹசரன்க. இசான் கிசான் வெறும் ஓர் ஓட்டத்துடன் ஆட்டமிழந்தார். மனீஸ் பாண்டே நிலைத்தாலும் தவானின் இன்னிங்ஸ் 29 ஓட்டங்களுடன் முடிவு கண்டது. 37 ஓட்டங்களுடன் பாண்டே ரண்அவுட் ஆனார். சூரியக்குமார் யாதவ் அரைச்சதம் கடந்து ஆட்டமிழந்தார். ஒரு கட்டத்தில் இந்திய அணி 193 ஓட்டங்களுக்கு 7 இலக்குகளை இழந்தது.

அதன் பின்னர் தீபக் சகர் அதிரடி காட்டினார். புவனேஸ்வர் குமார் நிலைத்து நின்றார். தீபக் சகர் அரைச்சதம் கடக்க 5 பந்துகள் மீதமிருக்க வெற்றிபெற்றது இந்திய அணி. சகர் 69 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காதிருந்தார். அவர் ஆட்டநாயகனாகவும் தெரிவானார். (ம)

## ஒலிம்பிக் தொடரில் இடம்பெற்ற அமெ. வீராங்கனைக்கு கொவிட்

வொஷிங்டன், ஜூலை 21

டோக்கியோ ஒலிம்பிக் தொடர் நாளைமறுதினம் ஆரம்பமாகவுள்ள நிலையில், இந்தத் தொடரில் இடம்பெற்றுள்ள அமெரிக்க வீராங்கனைக்குக் கொரோனா உறுதிப்படுத்தப்பட்டது.

டோக்கியோவில் அண்மைக்காலமாக மீண்டும் கொரோனா பரவல் அதிகரித்து வருகிறது. இந்த நிலையில் டோக்கியோ ஒலிம்பிக் கிராமத்தில் ஒருவருக்கு கொவிட் 19 தொற்று ஏற்பட்டுள்ளதாக நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் சில நாள்களுக்கு முன்பு அறிவித்தனர். பின்னர் ஒலிம்பிக் கிராமத்தில் தங்கியிருந்த 3 வீரர்கள் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று ஒலிம்பிக் நிர்வாகக் குழுவினர் தெரிவித்தனர்.

இந்த 3 வீரர்களும் எந்த நாட்டைச் சேர்ந்தவர்கள் என்பது குறித்த அடையாளத்தை நிர்வாகக் குழுவினர் வெளியிடவில்லை. இதனைத் தொடர்ந்து அடுத்தடுத்து சிலருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டு வருகிறது. இதுவரை ஒலிம்பிக் போட்டிக்கு வந்தவர்களில் 10 பேருக்கு தொற்று இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. இதில் 5 பேர் வீரர்களுடன் வந்தவர்கள், ஒருவர் ஒப்பந்ததாரர், ஒருவர் பத்திரிகையாளர் என 10 பேருக்கு தொற்று கண்டறியப்பட்டுள்ளது என்று போட்டி நிர்வாகக் குழுவினர் தெரிவித்துள்ளனர். (ம)







## பரிஸ் செயின்ட் ஜேர்மனுக்காக மெஸ்ஸி விளையாட வேண்டும்

*ராமோஸ் விருப்பம்*

பரிஸ், ஜூலை 21

ரியல் மட்ரிட் அணியின் முன்னாள் தலைவரும், பரிஸ் செயின்ட் ஜேர்மன் அணியின் தற்போதைய வீரருமான சேர்ஜியோ ராமோஸ், பரிஸ் செயின்ட் ஜேர்மன் அணியில் மெஸ்ஸி விளையாட வேண்டும் என்று தனது விருப்பத்தைத் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

பரிஸ் செயின்ட் அணியில் சிறந்த வீரர்கள் என்னைச் சுற்றிலும் இருக்கவேண்டும் என்று விரும்புகின்றேன். மெஸ்ஸி தற்போது உலகின் ஆகச் சிறந்த வீரராக உள்ளார். அவர் பரிஸ் செயின்ட் ஜேர்மன் அணியில் இருந்தால் சிறப்பாக இருக்கும் என்றார்.

மெஸ்ஸி தலைமையிலான பார்சிலோனா அணி ராமோஸ் முன்பு தலைவராக இருந்த ரியல் மட்ரிட்டின் பரம எதிர் அணியாகக் கருதப்படுகின்றது. இந்த நிலையில் மட்ரிட்டில் இருந்து வெளியேறிய சில நாள்களில் மெஸ்ஸியை உலகின் சிறந்த வீரராக ராமோஸ் அடையாளப்படுத்தியுள்ளமை பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (ம)

**சிறுநீரகம் தேவை**

A+ வகையைச் சேர்ந்த சிறுநீரகம் உடன் தேவை

தொடர்பு : 077 871 6354 / 076 856 9634

**A/L பௌதீகவியல்**

M. கருணாநிதி B.Sc ( Hons )

English / தமிழ் மூலம்

077 618 3064

**கட்டட மேற்பார்வையாளர்கள் தேவை**

வவுனியாவில் இடம்பெற்று வரும் கட்டட நிர்மாண வேலைக்கு மேற்பார்வையாளர்கள் உடன் தேவை.

தகுதி NVQ 4 Civil / QS or Equivalent

jupitern23@gmail.com

**இலங்கை வங்கியினால் விண்ணப்பங்கள் கோரப்படுள்ளதன் பிரகாரம்**

**BANK of CEYLON TRAINEE STAFF ASSISTANTS**

முடிவு திகதி : 31st July 2021

விண்ணப்பம் அனுப்ப தேவையான அனைத்து உதவிகளும் எம்மால் இலவசமாக செய்து தரப்படும்.

ஏற்றுக் கொள்ளப்படும் விண்ணப்பதாரிகளிற்கான எழுத்து மூலப் பரீட்சை மற்றும் நேர்முகப் பரீட்சைக்கான பயிற்சி நெறிகளும் எம்மால் வழங்கப்படும்.

24th July 2021 சனிக்கிழமைக்கு முன் தொடர்பு கொள்ளவும்.

NIFCO **Northern Investment & Finance Management Consultants**

*A Group of Retired Bank Managers*

30/1 Kumarasamy Road, Kandarmadam, Jaffna

Web : www.nifco.lk, Email : nifco2016@gmail.com

T.P : 076 600 6086 / 077 324 9078 / 077 768 7821

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 21.07.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.